Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA

கட்டடங்கள் கட்டுதல். வீடு கட்டுதல்.
பழைய வீடுகளைத் திருத்துதல்.
குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும், குறைந்த
விலையிலும், குறித்த காலத்திலும்
செய்து கொடுக்கப்படும்

(C/3690)

தொடர்புக்கு : 0776679564

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 10 செவ்வாய்க்கிழமை (24.06.2014) பக்கங்கள் 20 ஓசை –266

## எலிசபேத் மகாராணியின் ஜனனதின நிகழ்வு கொழும்பில்



(கொழும்பு)

பிரித்தானியாவின் 2 ஆவது எலிசபேத் மகாராணியின் பிறந்த தின வைபவத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவராலயத்தில் கடந்த 19


(19) ஆம் பக்கம் பார்க்க

## மாகாண மட்ட விளையாட்டு விழாவுக்கு காலம்தாழ்த்தி வந்தார் வடக்கு முதல்வர்

### கொளுத்தும் வெய்யிலில் காத்திருந்தனர் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற வடமாகாண மட்ட 7 ஆவது பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிகழ்விற்கு காலதாமதமாக வந்ததன் காரணமாக போட்டி நிகழ்வு நேற்று காலதாமதமாகவே ஆரம்பமாகியதுடன், போட்டி நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்த மாணவர்களும் கொளுத்தும் வெய்யிலில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



வடமாகாண மட்ட 7 ஆவது பாடசாலைகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டி நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் விசாரணை முல்லைத்தீவில் மீண்டும்

(முல்லைத்தீவு)

யுத்த நடவடிக்கையின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பில் அடுத்த மாதம் முதல் வாரத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை இந்த விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

# முஸ்லிம்களின் பாதுகாப்பு கோத்தாபய உத்தரவாதம்

## முஸ்லிம் தலைவர்களுடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் தேசிய இன ஒற்றுமையை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் சிலவற்றின் தலைவர்களுக்கும் இடையில் மிக முக்கிய பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுள்ளன.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சந்திப்பின்போது முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை வலுவாக்குவதற்கான ஏற்பாடுகளை வலுவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டை பலப்படுத்துவதற்கான திட்டங்களை செயற்படுத்துவது ஏன்றும் தீர்மானிக்கப்பட்டது.

அளுத்கம தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம்கள் மீதான வன்முறை நடந்த பின்னணியில் முஸ்லிம் தலைவர்கள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவை கொழும்பில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் முடிவுகள் அதிகாரபூர்வமாக வெளியிடப்படாத நிலையில், சந்திப்பு குறித்து அகில இலங்கை ஜமாயத் உல் உலமா சபையின் ஊடகச் செயலர் ஹுசேன் பைசல்



பருக் மேற்படி தகவல்களை நேற்றிரவு வெளியிட்டார்.

மேற்படி விடயங்களுக்கு உத்தரவாதம் வழங்குவதாக பாதுகாப்புச் செயலாளர் உறுதியளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையர்களுக்கான விசா விதிகளை இறுக்க அரபு நாடுகள் முயற்சி

(கொழும்பு)

அரபு நாடுகள் சில தம்து நாட்டுக்குள் நுழையும் இலங்கையர்களுக்கான விசா வழங்கும் நடைமுறையில் இறுக்கமான போக்கை பின்பற்றுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக அந்த நாடுகள் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுடன் ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அளுத்கம வன்செயல் மேலும் பலர் கைது

(கொழும்பு)

பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாணவன் மீது ஆசிரியர் தாக்குதல் பளை கல்வி வலயத்தில் சம்பவம்

(பளை)

மாணவன் ஒருவன் மீது ஆசிரியர் தாக்குதல் நடத்தியதில் அந்த மாணவனின் செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவன் இப்போது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பளை மத்திய கல்லூரியிலேயே கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இச்சம்பவத்தில் நடராசா கதீசன் (வயது - 18) என்ற மாணவனே பாதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து உரிய விசாரணைகள் எதுவும் விரைவாக மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (25)

## அளுத்கம மோதலுக்கு சர்வதேச சதியே காரணம்

### அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேச வன்முறைகளுக்கு சர்வதேசத்தின் சதியே காரணம் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாக்குகளை குறைப்பதற்காகவே இவை மேற்கொள்ளப்படுவதாகவும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

விகாரை, பள்ளிவாசல்களுக்கு தாக்குதல் நடத்தி சிங்கள - முஸ்லிம் மக்களிடையே மோதலை ஏற்படுத்துவது சர்வதேச நாடுகளின் சதி நடவடிக்கையே என அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் இலங்கையினுள் பயங்கரவாதம் ஏற்பட்டுள்ளதாக காண்பித்து, இந்தச் சம்பவத்தை ஜெனிவா மனித உரிமை சபைக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதற்கு முன்னர் இந்த நாட்டினுள் மோதல் நிலை இருக்கவில்லை எனவும் முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் நம்பிக்கையை பெற்றிருந்தனர் எனவும் அதாவுல்லா குறிப்பிட்டார்.

## அளுத்கமவில் நடந்தது என்ன? அரபு உலக இராஜதந்திரிகளுக்கு விளக்கம்



(கொழும்பு)

அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர்ப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பான விபரமான அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், முஸ்லிம் நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகளுக்கு அரசாங்கம் உடனடியான

(19) ஆம் பக்கம் பார்க்க

# இளைஞர்கள் தமது எதிர்காலத்தை ஒளிமயமானதாக அமைக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஆலோசனை



(யாழ்ப்பாணம்)

இளைஞர்கள் தமது எதிர்காலத்திற்கு நன்மை வழங்கக்கூடியவற்றைத் தேர்ந்தெடுத்து தமது எதிர்கால வாழ்வினை ஒளிமயமானதாக அமைத்துக் கொள்ள வேண்டும் என ஆக்க பூர்வமான அனைத்துச் செயற்பாடுகளுக்கும் நாம் என்றும் உறுதுணையாக இருப்போம் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வடக்கின் சுப்பர்கிங் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடாத்திய வடக்கின் சுப்பர்கிங் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி முதலிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தினைத் தனதாக்கிக்கொண்டது.

இரண்டாம் இடத்தை மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டது.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில், வளர்ந்து வரும் எமது இளைஞர் சமுதாயத்தின் திறமைகள் கல்வி, விளையாட்டுத்துறை போன்றவற்றில் வளர்க்கப்பட்டு அகில இலங்கை ரீதியாகச் சிறந்த வீர, வீராங்கனைகளாக எமது இளைஞர் யுவதிகளை முன்னேற்ற வேண்டும். தற்போது எமது இளம் சமுதாயத்தினரைச் சிலர் தமது சுயநலன்களுக்காகவும், எமது இளைஞர்களின் முன்னேற்றத்தினைத் தடைசெய்யும் வகையிலும், இளைஞர்களைத் தமது சுய இலாபங்களுக்காக பயன்படுத்துகின்றனர் என்றார்.

வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களினை நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத தலைவர் பசுபதி சீவரத்தினம் கலந்து கொண்டார்.

# மாயமானது 'பற்றறி'

(திருநெல்வேலி)

தாவடி வடக்கில் கார் பற்றறி ஒன்று களவாடப்பட்டுள்ளது. வீட்டுக்கு வெளியே சுவரில் மாட்டப்பட்டிருக்கும் ஆஞ்சநேயர் படத்துக்கு கலரிலான மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு அவற்றுக்கு இவ் பற்றறி மூலம் மின்சாரம் பெறப்பட்டு ஒளிர விடப்பட்டி[illegible]ந்து.

இ[illegible] வீட்டுக்குப் பகல் நேரம் இரும்பு, போத்தல்கள் மற்றும் பழைய பத்திரிகைகள் கொள்வனவு செய்வதற்காக அன்றைய தினம் மூன்று நபர்கள் சைக்கிள்களில் வந்த போது அந்த பற்றறியை விலைக்குத் தரும்படி கேட்டார்களாம்.

பற்றறி தேவையானதால் அதனை விற்பதற்கு வீட்டுக்காரர்கள் முன்வரவில்லை. மாலையில் பார்த்தபோது பற்றறி இருந்த இடம் வெறுமையாகக் காணப்படுவதைக் கண்டு வீட்டுக்காரர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இவ்வீட்டு வாராந்தாவில் கைக்கப்பட்டிருந்த, தினமும் தண்ணீர் ஊற்றிப் பூக்கள் வைக்கப்பட்டிருக்கும் அழகிய செம்பிலான ஜாடியொன்றும் திருட்டுப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (37)

# ஆலயங்களில் நடத்தப்படும் மிருக வதைக்கு எதிராக போராடுவதற்கு தீர்மானம்

(திருநெல்வேலி)

ஆலயங்களில் நடத்தப்படும் மிருக பலிக்கெதிராகத் தொடர்ந்தும் போராடுவதென சைவ மகாசபை தீர்மானித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கொக்குவில் கல்லூரி வீதியில் உள்ள சைவ மகாசபை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் ஜீவகாருண்யம் பற்றிப் பிரசாரம் செய்யவும், விழிப்ணர்வை ஏற்படுத்தவும் ஜீவகாருண்யக் குழு ஒன்றும் அன்றைய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

சைவ மகாசபைத் தலைவர் வைத்தியக் கலாநிதி நந்தகுமார் தலைமையில் இக்கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் மத்தியில் ஜீவகாருண்யம் பற்றியும், மிருக பலிக்கெதிராகவும் போதிய பிரசாரங்ளைக் கிராமங்கள் தோறும் முன்னெடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் வைத்தியர்கள் மற்றும் பல்துறை சா[illegible]வர்கள் கலந்து கொண்ட[illegible] (37)

# சின்னம்மா வித்தியாசாலையில் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(திருநெல்வேலி)

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலையின் ஸ்தாபகர் தினமும், பரிசளிப்பு விழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் வண.ப.சிவலோகநாத தேசிகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் கலந்து கொண்டார். ஆசியுரையை துணைவி முருகன் ஆலயப் பிரதம குரு பா. சதாசிவ குருக்கள் வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணமும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் .கு.சிவகுமார், ஸ்தாபகர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி செ.லீலாமணி, சங்கரத்தை இன்று வாலிபர் சங்கத்தலைவர் யோ.செந்தில்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நினைவுப் பேருரையை ஆசிரியர் ம.பரமேஸ்வரன் நிகழ்த்தினார். பரிசு பெற்றோருக்கான பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (137)

# நடமாடும் சேவை

(கொக்குவில்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு கொக்குவில் மேற்குப் பகுதியில் நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நடமாடும் சேவைகள் இன்று கொக்குவில் பாரதிபுரம் சன சமூக நிலையத்தில் காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி இந்த நடமாடும் சேவைகளில் கட்டட வரைபடம், ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைகள் , நூலக சேவைகள், பெயர் மாற்றங்கள் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விழிப்புணர்வுப் பயிற்சி

சர்வதேச தொலைத் தொடர்பு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவாகளுக்கு தகவல் தொலைதொடர்பு விழிப்புணர்வு ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

கிளிநொச்சி, இரணைமடுவிலுள்ள இராணுவ நிலையக் கேட்போர் கூடத்தில் இந்த ஒரு நாள் பயிற்சி நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள், ஆசி ரியர்கள் உள்ளிட்ட 600 பேர் அளவில் இதில் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுகந்த ரனசிங்க முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்துள்ளார். (63)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி, ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானமுள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு. (R/352)


# வருடாந்த மஹோற்சவங்கள்

(திருநெல்வேலி)

நெடுந்தீவு, நடுக்குறிச்சி, பெருக்கடி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்குப் பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி வீதியுலா வலம் வருவார்.

மறுநாள் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மணற்கிணற்றடி சமுர்த்திர தீர்த்தம் இடம்பெறும்.

ஊரெழு பர்வதவர்த்தின ஆலயப் பிரதமகுரு குருவம்ச சிகாமணி சிவஸ்ரீ சொ.வாகீஸ்வரக் குருக்கள் மஹோற்சவ குருவாகக் கடமையாற்றவுள்ளார். (137)

□ □ □ □ □

(அச்சுவேலி)

கரவெட்டி முங்கோடை ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை காலை 6.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின் வரிசையில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத்திருவிழாவும், மறுநாள் தேர்த்திருவிழாவும், 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (85)

□ □ □ □ □

(அச்சுவேலி)

கரவெட்டி கிழவிதோட்டம் விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை காலை இடம்பெறவுள்ளதுடன், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆலோசனை வழிகாட்டல்கள்



பச்சிலைப்பள்ளிபிரதேசத்தில் பரவலாக அனைத்து கிராமங்கள் தோறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் ஊடாக சட்ட ஆலோசனைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு முகமாலை கிராமத்தில் கிராம அலுவலர் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது

இதில் காணி தொடர்பான சட்டப்பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், அவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பாகவும் எடுத்துக்கூறப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (37)

# ஊரியான் கிராமத்திற்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை ஊரியான் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை மின்சாரசபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கையாக ஊரியான் பகுதி வீதிகளூடாக மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் இணைப்பு வேலைகளுக்கான வயர் கம்பிகள் முதலிய பொருட்கள் அங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

வீதிகளின் இருமருங்கிலும் தூண்கள் நாட்டுவதற்கு தடையாகவுள்ள மரங்கள் வெட்டி அகற்றப்பட்டு தூண்கள் நாட்டப்பட்டு வருகின்றன.

முரசுமோட்டை ஊரியான் கிராமத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டுத்திட்டம் மூலமாக வீடுகளை நிர்மாணித்துக் கொண்டவர்களுக்கு இந்த நடவடிக்கை மூலம் விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மஹோற்சவம்

மண்டைதீவு முகப்பு வயல் அருள்மிகு சிவசுப்பிரமணிய ஆலயத்தின் மஹோற்சவம் கடந்த 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

[illegible]ளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் நண்பகல் 12 மணிக்கு பச்சை சாத்துதலும் இடம்பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் 28 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும்இடம் பெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு காலைப்பூசையும் 9 மணிக்கு கும்பப்பூசையும் ஆரம்பமாகி முற்பகல் 10.30 மணிக்கு ஸ்தம்ப பூசை இடம்பெற்று 11.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் நிறைவு பெறுகின்றது அதனைத் தொடர்ந்து மாலை நிகழ்வுகளாக 5 மணிக்கு மாலைப் பூசையும் 6 மணிக்கு ஸ்தம்ப பூசையும் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறுகின்றது.

மஹோற்சவ வழிபாடுகளை கிரியாரத்தின ஜோதி கிரியாபூஷணம் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அசோக் வரசர்மாகவும் சர்வசாதகம் பிரம்மஸ்ரீ ந.குமரகுருபரசர்மாவும் நிகழ்த்துகின்றனர். (எஸ்.பி)

# சுகாதார விழிப்புணர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

SDC நிறுவனத்தின் அனுசரணையுடன் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்ட சுகாதார விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் நிறைவாக வத்திராயன், முழங்காவில், முகாவில், மறுவன்புலோ, தட்டுவன்கொட்டி [illegible]ன்ற கிராமங்களில் இறுதி கலைநிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.

இக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளின் சிறப்புத்தன்மை அடிப்படையில் முதல் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு, முறையே 25000, 15000, 5000 போன்ற பணப் பரிசும் வழங்கப்பட்டன. அந்தவகையில் வத்திராயன், முகாவில், மறுவன்புலோ போன்ற கிராமங்கள் வெற்றி பெற்றதையடுத்து, இக்கிராமங்களை நெறிப்படுத்திய காவேரி கலாமன்ற வளவாளர்களுக்கு இயக்குனரால் பாராட்டி பரிசில்களும் வழங்கப்பட்டன. (90)

# "எனக்குப்பிடித்த படைப்பு" இலக்கிய அனுபவப் பகிர்வு





(யாழ்ப்பாணம்)

உயில் கலை இலக்கிய சங்கத்தின் 15 ஆவது நிகழ்வாக "எனக்குப் பிடித்த படைப்பு - வாசக அனுபவம்" என்னும் இலக்கிய அனுபவப் பகிர்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வதிரிவடக்கு மெ.மி.த.க பாடசாலையில் கவிஞர் ந.மயூரரூபன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தானாவிஷ்ணு எஸ் போஸின் "சூரியனைக் கவர்ந்து, சென்ற மிருகம்" என்ற கவிதை, பற்றியும், சி.விமலன் அ.ரவியின் "வாணியின் வீடு" சிறுகதை பற்றியும், யாத்திரிகன் "கருணாகரனின் - துப்பாக்கியின் தியானத்தில்" கவிதை பற்றியும் சித்திராதன் தேவாவின் மொழிபெயர்ப்பில் வந்த "குழந்தைப் போராளி" என்ற நாவல் பற்றியும், சு.குணேஸ்வரன் செ.சுதர்சனின் "சிங்கம் தின்ற நிலம் பற்றிய கவிதைகள்" பற்றியு[illegible]மது வாசக அனுபவங்களைப் ப[illegible]து கொண்டனர்.

நிகழ்வில் உரைகளின் ந[illegible]விலும் இறுதியிலும் கருத்துப் பகிர்வுகளும் இடம்பெற்றன. கருத்துப் பகிர்வில் சி.சின்னராஜன், பொலிகையூர் எஸ்.குமாரதீபன் இ.சு.முரளிதரன் மா.கிருஷ்ணகாந்தன், ம.அனந்தராசன் ஆகியோர் பங்கெடுத்தனர். நன்றியுரையை எம்.எஸ்.எஸ்.இரத்தினசேகரன் நிகழ்த்தினார். (63)

# இனவாதிகளின் கொண்டாட்டமும் பொதுசனங்களின் திண்டாட்டமும்

வடபுலத்தான் எழுதுவது...

தன்ரை தலையிலயே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டிருக்கிறார் மகிந்தர்.

'என்ன செய்யிறது காலம் பிழைச்சால் தங்கத்தட்டிலயே சனியன் ஏறிக் குந்திவிடுமாம்'. அப்பிடித்தானிருக்கு இப்ப மகிந்தற்ற நிலையும் அவற்ற தரப்பில நடக்கிற வேலைகளும்.

'எப்பிடியாவது அடுத்த தடவை தோத்துக் காட்டுறன் பார்' எண்டமாதிரி, வில்லங்கப்பட்டுக் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் சிங்கன்.

இல்லையெண்டால், மடியுக்குள்ள இருக்கிற முஸ்லிம்களோட வம்புக்குப் போவாரோ...! இல்லாட்டி அவையள ஆரும் வம்பு பண்ண விடுவாரோ...!

முஸ்லிம்களோட இப்பிடிப் பிரச்சினைப்பட்டால், இல்லாட்டி முஸ்லிம்களின்ரை பிரச்சினைகளை கண்டும் காணாமலும் விட்டால்... அதால பெரிய வில்லங்கமெல்லாம் நாளைக்கு வந்தே தீரும்.

அரசாங்கத்தோட இணைஞ்சு, ஆதரவாக முஸ்லிம் கட்சிகளும் தலைவர்களும் இருக்கினம்.

அரசாங்கத்தை எந்த முஸ்லிம் கட்சியும் இதுவரை பகிரங்கமாக எதிர்க்கேல்ல.

இப்பிடியெல்லாம் இருக்கேக்க, தம்புள்ளயில பள்ளிவாசலைக் கொளுத்தினதில தொடங்கி, இப்ப அளுத்கம, பேருவளை வரையில முஸ்லிம்களோட பொதுபல சேனா சேட்டை விடுகுது எண்டால்....!

இந்தச் சேட்டையை இன்னும் கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வரேல்ல எண்டால்...

நாளைக்கு இதை வைச்சே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும்தமிழ், முஸ்லிம்கடுந்தேசிய வாதிகளும் அரசாங்கத்துக்கு எதிராகச் சனங்களைக் கிளப்பி விடுவினம்.

'பாத்தியளா.. நாங்கள் அப்பவே சொன்னம், இந்த நாட்டில சிங்களவர்களைத் தவிர, வேற ஆட்கள் நிம்மதியாக இருக்கேலாது. இணைஞ்சிருக்கிற முஸ்லிம்களையே இப்படிப் போட்டு ஆட்டிப்படைக்கிற அரசாங்கத்தோட எப்பிடித் தமிழர்கள் இணைஞ்சிருக்க முடியும்?' எண்டு ஒரு கேள்வியைத் தூக்கிப்போட்டால்... மறுபேச்சில்லாமல் அத்தனைபேரும் நம்பி விடுவினம்.

இதைத்தான் கூட்டமைப்பு நாளைக்குச் செய்யப்போகுது.

எல்லாப் பக்கமும் இருக்கிற இனவாதிகளுக்கு இதெல்லாம் அவல் கிடைச்ச மாதிரித்தானே! பெரிய இனவாதியள் அவைதான் எண்டு காட்டிப்போட்டுத் தங்களை அதுக்குப்பின்னால மறைச்சுக் கொள்ளுவினம்.

இப்பிடிச் சனங்கள இனரீதியா ஆவேசப்படுத்த வாய்ப்புக் கிடைச்சா கூட்டமைப்புக்காரருக்குப் பின்னை பேய்க்கொண்டாட்டம்தான்... சும்மா இருந்தே பெரிய வெற்றியைக் கையில எடுக்கலாமே...

இதை மாதிரி அடுத்த தடவை யு.என்.பிக்கு முஸ்லிம்களின்ரை வாக்குகளை அள்ளிக் குடுக்கப்போகுது இந்தப் பிரச்சினைகள்.

இப்பவே ஏராளம் முஸ்லிம்கள் அப்பிடித்தான் கதைக்கினை.

இதோட மட்டும் நிக்காமல், இப்ப அரசாங்கத்துக்கு ஆதரவளிச்சுக் கொண்டிருக்கிற தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளையும் தோற்கடிக்க வைக்கக் கூடிய கொண்டிசனும் இருக்கு.

இதுகள் எங்க போய் முடியும் எண்டு விளங்கோணும்.

இப்பிடியே இந்தப் பிரச்சினைகள் நீடிக்குமெண்டால், அடுத்த தடவை கிழக்கு மாகாணசபை அரசாங்கத்தின்ரை கையில இருந்து கட்டாயம் கழரும்.

அதைப்போல, யு.என்.பிதான் தெற்கிலயும் ஏராளம் பிரதேச சபைகளையும் மாகாணசபைகளையும் கைப்பற்றும்.

எங்கயெல்லாம் முஸ்லிம்களும் தமிழாக்களும் இருக்கினமோ அங்கையெல்லாம் இந்த நிலைமைதான் உண்டாகும்.

இதோட மட்டும் இந்தச் சரிவு நிக்காது. அது நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் எண்டும் பாயும்.

இப்பவே கதிரையில இருந்து ஆளை இறக்கிறதுக்கு ஆயிரம் வேலைகளை அவனவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

'கதிரையில இருந்து இறக்கினால் பரவாயில்லை. கழுத்திலயல்லோ சுருக்கை மாட்டப்பாக்கிறாங்கள் எண்டு சொல்லிறார்பக்கத்தில் இருக்கிற சிவசம்பு அண்ணை.

சிவசம்பு அண்ணை சொல்லிறதை மறுக்கேலாது. உலகத்தில பாதிப்பேர் 'இந்தா இறக்கிக் காட்டிறன் பார்!' எண்டு பந்தயம் கட்டிக்கொண்டிருக்க, ஐ.நா. மனித உரிமைப் பேரவை சுருக்குக் கயிற்றை கழுத்தில மாட்டிறன் எண்டு கங்கணம் கட்டிக்கொண்டிருக்குது.

இந்த நிலைமையில உள்ளுருக்கையும் ஆயி[illegible] பிரச்சினை எண்டால்....

அதிலயும் கூட இருக்கிறவையை – அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கிறவையையே எட்டி உதைச்சால்...

அவசரமாக இதுக்கொரு தீர்வைக் காணவேணும்.

அதைப்போல சிறுபான்மைச் சமூகங்களின்ரை கட்சித்தலைவர்கள் எல்லாம் ஒன்டாக்கூடி இந்த நிலைமையைப் பற்றி ஜனாதிபதியிட்ட எடுத்துச் சொல்லோணும்.

இதையெல்லாம் செய்யாட்டிக்கு நாளைக்கு அதுக்கான கணக்கைப் பார்க்க வேண்டித்தான் வரும்.

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள். - சுபாஷ் சந்திரபோஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நினைவில் எதுவும் நிற்பதில்லை!

மனிதகுலத்தின் நாகரிக வளர்ச்சியில் நவீன கருவிகளின் வளர்ச்சியால் வரவர எதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை குறைந்து வருகிறது. சிறிய உதாரணம், யாருடைய தொலைபேசி இலக்கமாவது இப்போது நம் ஞாபகத்திலிருந்து எடுக்க முடிகிறதா?

நம்முடைய கைத்தொலைபேசியில் சேமித்து வைக்கப்பட்ட நம்பர்களோடு அது தொலைந்து போய்விட்டால் நம் நினைவில் எந்தவொரு தொடர்பு நம்பரையும் திரும்பக் கொண்டுவர முடியாத அவஸ்தையை இன்றைய காலகட்டத்தில் வாழும் பலரும் அனுபவப்பட்டிருப்பர்.

இலக்கங்களை விரல்களால் அழுத்தி தொலைபேசிய சமீபத்திய காலத்தில் கூட, அடிக்கடி பயன்படுத்திய இலக்கங்கள் நினைவில் நின்றன. ஆனால் இப்போது பயன்படுத்தும் எளிமையில் கைத்தொலைபேசிகள் முன்னேற்றமடைந்ததன் காரணத்தால், நாம் பேச வேண்டிய நபரின் பெயரையோ படத்தையோ தொட்டாலே தொடர்பு கிடைத்து விடுவதால், தொலைபேசி இலக்கம் நமக்குத் தேவைப்படுவதில்லை.

தொடவும் தேவையில்லை பெயரைச் சொன்னாலே அழைப்பு கிடைத்துவிடும் தொழிநுட்பமும் வந்துவிட்டது. அழைப்பு இலக்கத்தைச் சேமித்து வைக்கும்போது கூட இலக்கங்களை நம் விரல்கள் அழுத்தும் தேவை இருப்பதில்லை. நம்மை அழைத்து வரும் நம்பரை அப்படியே சேமித்து வைத்துவிடுகிறோம்.

கல்குலேட்டர் வந்ததோடு வாய்பாடு பாடமாக்குதல் அவசியமற்றுப் போனது. கம்ப்யூட்டர் வந்து நமக்காக எல்லா நினைவுகளையும் சேமித்து வைத்துக் கொண்டது. இணையத்தின் விரிந்த வெளி உண்டான பிறகு, அது எதைக் கேட்டாலும் நொடிக்குள் கொண்டுவந்து கொட்டியது.

ஆண்டுகள், திகதிகள், இடங்கள், அத்தியாவசியத் தரவுகள் எதையும் நினைவுபடுத்தி வைத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. கூகிள் இருக்கும்போது கவலை எதற்கு? கம்ப்யூட்டர் நினைவிடங்களின் அளவும் பெருகிப் பெருகி வளர்ந்தபடியே, நம் ஞாபகத்தில் எதையும் இருத்தி வைத்துக்கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

நம் முன்னோர் தங்கள் மனங்களில் மனனம் செய்து பதித்து வைத்திருந்ததன் மூலமே தம் அறிவுச் சேகரங்களை நமக்கு கடத்தித் தந்தார்கள். நமது பண்டைய இலக்கியங்கள், மருத்துவ சோதிடக் குறிப்புகளெல்லாம் மனனம் செய்து வைத்திருந்து அடுத்த சந்ததிக்குத் தருவதற்காகவே செய்யுள் வடிவில் அவற்றை இயற்றிச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

முகமது நபியின் போதனைகள் அனைத்தும் அவரது துணைவியாரும் தோழர்களும் மனனம் செய்து வைத்திருந்து பின்னாளில் எழுத்து வடிவாகத் தொகுக்கப்பட்டவையே. அதுபோல கௌதம புத்தரின் போதனைகளும் ஆனந்தன் முதலான அவரது சீடர்களால் ஞாபகம் வைக்கப்பட்டுப் பின்னர் தொகுக்கப்பட்டவையே.

இன்று அப்படி ஒரு முயற்சியை நம்மால் நினைத்துப் பார்க்க முடியாது. பல்கிப் பெருகிவிட்ட இணையதளங்கள், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் நம்மைப் படுசோம்பேறிகளாக்கி விட்டதுடன் மெல்ல மெல்ல எங்களைத் தமக்கு அடிமைகளாக மாற்றிவிட்டன.

எல்லாவற்றையும் இயந்திரங்களின் கையில் கொடுத்துவிட்டு நாம் மறதி மன்னர்களாகி விட்டோம். கேட்பது பார்ப்பது மட்டுமே நடைமுறையில் உள்ள மனிதர்களாகி விட்டோம்.

இவ்வாறு ஞாபக சக்தியைக் கைவிட்டு வரும் மனிதனது மூளையின் விருத்தி குறைந்துவிடுமா தெரியவில்லை. ஆனால், விஞ்ஞானக் கதைகளில் சொல்லப்படுவது போல, இயந்திரங்களின் சிந்தனைக்கு மனிதன் அடிபணியும் காலம் வரலாம் என்றே தோன்றுகிறது.

- ஆசிரியர்

# இன, மத அடிப்படையிலான கட்சிகளை தடைசெய்யவேண்டும்

## - பேராசிரியர் ரொஹான் குணரட்ன

மத மற்றும் இனத்துவ அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளை தடை செய்ய வேண்டுமென பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான நிபுணத்துவ பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இன மற்றும் மதவாத அடிப்படையிலான அரசியல் கட்சிகளின் பதிவினை ஏற்றுக்கொள்ளக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய மற்றும் பொதுபல சேனா போன்ற இன மற்றும் மதவாத அடிப்படையிலான கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டுமென தெரிவிததுள்ளார்.

இவ்வாறான அரசியல் கட்சிகள் நாட்டின் ஐக்கியத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாடு பிரிவினைவாதத்தை அடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேருவளை அளுத்கம பிரதேசத்தில் படையினர் உரிய நேரத்தில் தலையீடு செய்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்த காரணத்தினால், கறுப்பு யூலை போன்றதொரு சம்பவம் தடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு சமூகமும் தனிப்பட்ட நபரும் மற்றுமொரு நபரையோ அல்லது இன, மத சமூகத்தையோ இழிவுபடுத்த அனுமதிக்கக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குரோத உணர்வுகளைத் தூண்டக் கூடிய பேச்சுக்கள், பிரசாரங்களை தடுக்க தற்போது நாட்டில் சட்டங்கள் எதுவும் கிடையாது எனவும். இது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய சட்டமொன்றை உருவாக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன சமூகங்களுக்கு இடையில் முரண்பாடுகள் கிடையாது எனவும், சகோதரத்துவம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் குறுகிய நோக்கங்களுக்காக இன உணர்வுகளை மத உணர்வுகளைத் தூண்டி அதன் மூலம் இலாபமீட்டிக் கொள்ள முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். இன மத விவகாரங்கள் அரசியலுக்குக் கொண்டு வரப்படுவதனை தடுக்கும் வகையில் சட்டங்கள் அவசியப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அதிகார மோகம் கொண்ட அரசியல் தலைவர்கள் சமூகத்தை இன, மத, சமூக அடிப்படையில் பிளவுபடுத்தி அதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வாகன விற்பனை முயற்சி பிரதேச சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களைத் தயாரித்து 18 வாகனங்களை விற்பனை செய்ய முயற்சித்த ஹிங்குராங்கொட பிரதேச சபை உறுப்பினரான பந்துல விக்ரமரத்ன உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஹான, கல்கிஸை, கண்டி மற்றும் நுவரெலியா போன்ற பிரதேசங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்ததை அடுத்தே மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. அத்துடன், மேற்படி பிரதேச சபை உறுப்பினர் வசமிருந்த 8 வாகனங்கள் உட்பட 18 வாகனங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவற்றுள் 4 கெப் வாகனங்கள், இரண்டு லொறிகள், இரு வான்கள் மற்றும 10 கார்கள் அடங்குவதாக பொலிஸ் தலைமையகம் கூறியது. வாடகை அடிப்படையிலும் கார் விற்பனை நிலையங்களிலிருந்து லீசிங் திட்டப்படியும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டே அவற்றை விற்பனை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கைதான இரு சந்தேகநபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியது.

# மத விவகாரம் குறித்து 52 முறைப்பாடுகள்

மத விவகாரங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற 52 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மத விவகாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தசாசன அமைச்சின் கீழ் இயங்கும் இப் பொலிஸ் பிரிவுக்கு 308 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. சகல முறைப்பாடுகள் தொடர்பிலும் அந்த அந்த பொலிஸ் பிரிவுகளில் விசாரணைகள் இடம்பெறும் என மத விவகாரங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் பிரிவின் பொறுப்பான பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அறிவித்தலின்றி மற்றும் பொறுப்பின்மையால் ஏற்படும பிரச்சினைகள் குறித்து தொடர்பு பட்டவர்களை அறிவுறுத்தல் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தவறான அவசர அழைப்பு எதிராக சட்ட நடவடிக்கை

பொலிஸ் அவசர அழைப்புக்கு தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸார் தீர்மானித்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அவசர அழைப்புக்கு நாளொன்றுக்கு வரும் 100 அழைப்புகளில் 50 இற்கும் அதிகமானவை தவறான தகவலை வழங்கும் அழைப்புகளாக இருக்கின்றன. இந்த நிலையில் இவ்வாறான தவறான அழைப்புகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

# சிறுமிகளின் விருப்பத்துடனேயே அதிகளவில் துஷ்பிரயோகங்கள்

## என்கிறது பொலிஸ் தலைமையகம்

இலங்கையில் நாளாந்தம் ஐந்து அல்லது ஆறு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது.

வருடாந்தம் இத்தகைய இரண்டாயிரம் சம்பவங்கள் பதிவாவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கின்றார். இவற்றில் 90 வீதமானவை, சிறுமிகளின் விருப்பத்துடனேயே இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அது சட்டத்தின் முன் தவறு எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

சிறுவர் துஷ்பிரயோகம் குறைக்கப்பட வேண்டுமாயின், பல தரப்பினருக்கும் பொறுப்புக்கள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். சிறுவர்களின் பெற்றோர் ஆசிரியர்கள், மற்றும் அவர்களின் தற்காலிக பாதுகாவலர்களிடமே அதற்கான பொறுப்பு காணப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# பொங்கல் விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் குழைக்கடையடி பழந்தோட்டம் வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று மாலை 8 மணிக்கு பொங்கல் விழா ஆரம்பமாகி நள்ளிரவு ஒரு மணிக்கு நிறைவடையும். (இ)

PUBL... JAFFNA.



**கிளிநொச்சி** யாழ்ப்பாணம் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக 29-04-2014 அன்று வடமாகாண சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளதாக அறிந்துள்ளோம். இந்தத் தீர்மானம் தீர்க்க தரிசனமற்ற முறையில் அவசரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனிப்பட்டோரினது அகங்கார வெற்றிக்காக எடுக்கப்பட்ட தீர்மானமாகவே இதைக் கருத வேண்டி உள்ளது.

மேலும் இத்திட்டம் தொடர்பாகப் பொது மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் ஒன்று ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்தினையும் இது கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இது உண்மையில் எதிர்மாறான விளைவினையே ஏற்படுத்தும் என்கின்ற சாதாரண உண்மை கூட புலப்படத் தேவையான கால அவகாசம் சபை அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கிளிநொச்சி - யாழ் நீர் விநியோகத் திட்டமானது யாழ் மாவட்ட மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது மட்டுமல்லாது இப் பிரதேசத்தில் நாகரிகம் ஒன்றின் இருப்பின் பேண்தகு திறனை இல்லாது சிதைக்கும் பாரிய பக்க விளைவுகளையும் தடுக்கின்ற ஒரு திட்டமாகவே கருத வேண்டும்.

2002ஆம்ஆண்டு சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டம் 2003ஆம் ஆண்டிலிருந்து முறையான நடைமுறைகளைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டதோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் யாழ். பல்கலைக்கழக சமூகம் குறிப்பாக பேராசிரியர் துரைராஜா ஆகியோரது பங்களிப்புடனேயே உருவாக்கம் பெற்றது. 2005ஆம் ஆண்டளவில் இத் திட்டம் பற்றிய சாத்தியப்பாடுகள் பற்றிய உள்ளக ஆய்வுகளின் வழமையான முன் நிபந்தனை விடயத்தினை விட பின்வரும் விடயங்களும் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருந்தன.

சுண்டிக்குளம் நன்னீர்த்திட்டம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாக்கக்கூடிய வேறு அணைத்திட்டங்கள்.

எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றம் மற்றும் எல் நினோ தாக்கங்களின் விளைவுகள்.

கடல் நீர்மட்டம் உயர்வதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

போன்ற விடயங்கள் கூட முக்கியமான ஏனைய வழமையான விடயங்களுக்கு மேலதிகமாகக் கவனத்திற்கு எடுக்கப்பட்டன.

உலகளாவிய அனுபவத்தின் படி நிலக்கீழ் நீர் வளங்கள் கட்டுப்பாடற்ற உறிஞ்சுதலினால் பாதிப்புக்குள்ளாகி உள்ளமை நிறுவப்பட்டுள்ளது. நிலக்கீழ் நீர் பேண்தகு முறையில் உபயோகிக்கப்பட வேண்டுமாயின் அதற்கு நில மேற்பரப்பு நீரின் தொடர்ச்சியான மீளளிப்பு இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். அதாவது நில மேற்பரப்பு நீர் இடையறாது நிலத்தடி நீரை நிரப்பிக் கொண்டிருந்தால் மட்டுமே நிலத்தடி நீரின் கட்டுப்பாடற்ற உபயோகம் பேண்தகு முறையில் நடைபெற முடியும்.

இதன் கருத்து யாதெனில் நிலத்தடி நீர் வள அபிவிருத்தி என்பது உண்மையில் நில மேற்பரப்பு நீரின் அபிவிருத்தியே. யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்ற நிலத்தடி நீர் ஆயிரமாயிரம் வருடங்களாக நடைபெற்று வந்த சேமிப்பின் பலனாகவே ஏற்பட்டதாகும். இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற கட்டுப்பாடற்ற உபயோகம் இந் நீர் பாதிப்படைவதற்குப் பிரதானமான காரணமாயிற்று. பழைய நிலைமைக்கு மீளத் திருப்பிக் கொண்டு வர முடியாவிட்டாலும் பேண்தகு நிலை ஒன்றினை நிர்ணயித்து அதனைப் பேணுவதாயின் இருபக்க நடவடிக்கைகள் அவசியமாகும்.

1. ஒன்று நீரை பாதுகாப்பதும் உறிஞ்சி வெளியே எடுத்தலைக் கட்டுப்பாட்டினில் வைத்திருப்பதும்.

2. மற்றையது தரை மேற்பரப்பு நீரைக் கொண்டு வந்து சேர்ப்பது. இதற்கான செயற்பாட்டு மட்டங்களை நிர்ணயிக்கும் போது நீர்ச்சமன்பாடு ஒன்றினைக் கணித்துக் கொள்ளல் வேண்டும் அதாவது ஒரு வருடத்தில் எமக்குக் கிடைக்கின்ற மேற்பரப்பு நீரின் அளவு, நாம் நிலத்தின் கீழிருந்து பெறுகின்ற நீரின் அளவு, நிலத்தடியில் சேமிக்கப்படுகின்ற நீரின் அளவு, நீரினுடைய தூய்மைத்தன்மையில் ஏற்படுகின்ற தாக்கத்தின் அளவு, எய்தப்படவேண்டிய நீரின் தரம் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு பேண்தகு மூலவள உபயோகத்திற்கான செயற்பாட்டு மட்டங்களை நிர்ணயித்து அவற்றினை எய்திக்கொள்வதற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளல் வேண்டும்.

50 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் கிடைக்கக்கூடியதாக இருந்த நிலத்தடி நன்னீரின் அளவை தரத்தையும் கொண்ட பழைய சமநிலையை மீண்டும் மழைநீரைக் கொண்டுவர வேண்டுமாயின் எத்தனை வருடங்கள் எடுக்குமோ எமக்குத் தெரியாது. யாழ்பாணத்தில் பெய்கின்ற மழை நீர் முழுவதையும் தேக்கி நிலத்திற்குக் கீழே செலுத்துவதாயின் ஆயிரக்கணக்கான சிறு குண்டுகளைத் தோண்டி அதன் மூலம் சாதிக்கலாம் என்ற கருத்து ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு முன் வைக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது.

இவ் அணுகுமுறையின் படி காலநிலை மாற்றம், தாழ்நிலக் குடியிருப்புக்களின் தோற்றமும் வளர்ச்சியும், மற்றும் விவசாய தொழில்நுட்பங்களின் மாற்றங்கள் போன்றவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் ஈடு செய்தே யாழ்ப்பாணக் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படமுடியும்.

மழை நீரை உபயோகிப்பதின் மூலம் தீர்வு காணுவதாயின் அதற்கும் எத்தனை வருடங்கள் எடுக்குமோ தெரியாது. நிலத்தடி நீரைஉபயோகித்து நீர் விநியோகத் திட்டங்கள் நீண்ட காலத்திற்கு இயங்குவது வெகு அரிது.

இவை மட்டுமன்றி யாழ். குடாநாட்டின் குடிசனப்பரம்பலை மேலும் குறைக்க வழிவகுக்கும் பொருளாதார, வாழ்வாதார உத்திமுறைகளைத் தவிர்த்தல், வட மாகாணத்தினுடைய நிலப்பயன்பாட்டின் கட்டுப்பாட்டினை வட மாகாண நிர்வாகத்தின் கைகளிலேயே தக்க வைத்தல், வட மாகாண குடித்தொகை விகிதாசாரத்தை நலிவடையாமல் பாதுகாத்தல் போன்ற விடயங்களும் இத் திட்ட முன்மொழிவினை ஆராய்ந்த நிபுணர்களினால் அப்போது பரிசீலிக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கான பதிவுகள் அரசாங்க நிர்வாக இயந்திரத்தினுள் பதியப்படாமல் இருந்ததற்குக் காரணங்கள் இருந்திருக்கலாம்.

**வடமாகாணத்திற்குள்ளேயே கிடைக்கக் கூடியதாக உள்ள நில மேற்பரப்பு நீரினை உச்ச அளவில் உபயோகித்துக் கொள்ளவும் அதே நேரத்தில் நிலக்கீழ் நீர் முகாமை மற்றும் நீரின் தரத்தினை மேலும் சுத்தமடையச் செய்தல், தடையறா சமூக அபிவிருத்திக்கு வழிவிடுதல், கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய அபிவிருத்தியின் பேண்தகு திறனைக் காப்பாற்றி வைத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்ட ஒரு குடிநீர்த்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் அத்தியாவசியமாக்கியது.**

**இரா.சிவசந்திரன் கட்டுரையிலிருந்து**

எது எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினைக்கும் தமிழர் நாகரிகத்தின் தொடர்ச்சியான இருப்பிற்கும் இப் பிரதேச நில ஆளுகைக்கும் வட மாகாணத்தினுள் கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீரினை முறையான திட்டங்களை ஈடுபடுத்தி முகாமை செய்வதன் மூலம் செய்தலே சிறந்தது என்ற முடிவிற்கு வந்திருந்தார்கள்.

எவ்வாறாயினும் யாழ்ப்பாண நிலக்கீழ் நீரினை குறுகிய காலத்தினுள் மீள் அபிவிருத்தி செய்வதாயின் அதனை நில மேற்பரப்பு நீரினைக்கொண்டு தான் ஈடுசெய்ய முடியும் என்ற வெளிப்படையான உண்மை அநாகரிகமாக மறைக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான சிறு குண்டுகளோ அல்லது சுண்டிக்குளம் வாவியோ மாற்றுத் தீர்வாகும் என்பதற்கு இன்று வரை தொழில்நுட்ப ரீதியாகவோ விஞ்ஞான ரீதியாகவோ ஏற்றுக்கொள்வதற்கான ஆய்வுகள் இல்லை. இவை வெறும் முன்மொழிவுகளே.

இன்றைய யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப்பிரச்சினை மிகத்தீவிரமானது இது பற்றிப் பல விபரங்கள் உள்ளன. தீவகத்தில் இருந்தும் மற்றும் கரையோரப் பிரதேசங்களிலிருந்தும் மக்கள் குடிப்பெயர்விற்கு நன்னீர் இன்மை முக்கியமான ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

தீர்க்கதரிசனமற்ற குறுகிய அரசியல் லாப நோக்கம் கொண்ட அவசரப்புத்திக்காரர்களின் நடவடிக்கைகளினால் ஒரு சுத்தமான உள்வீட்டுப்பிரச்சினை மத்திய அரசுக்குரிய அரசியல் வாய்ப்பாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் தீர்மானத்தினைப் பார்த்து இவ்வளவு வேகமாகத் தீர்மானம் நிறைவேற்ற முடிந்தவர்களால் இச்சபை கலையும் முன்னர் ஏதாவது ஒரு திட்டத்தை யாவது உருவாக்கி நடைமுறைப்படுத்திக் காட்ட முடியுமா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

பொதுவாக, நிலத்தினுடைய மேற்பரப்பில் கிடைக்கும் நன்நீரை நிலத்திற்குள் செலுத்துவதற்கான நட்டமுறைகள் போதாமையாக இருக்கின்ற அதே நேரத்தில் நிலத்தடி நீரை வெளியே பெறுகின்ற வீதம் அதிகரித்துச் செல்லுமாயின் நீரினுடைய தரமும் அளவும் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து கொண்டே செல்லும்.

யாழ்ப்பாணத்து நிலத்தடி நீரினைப் பொறுத்து இவ் இரண்டு பண்புகளும் எதிர்மறையான போக்கில் செல்கின்றன என்பதைப் பற்றி விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கத் தேவையற்ற பல ஆதாரங்கள் வெளிப்படையாக உள்ளன.

அதிகார பூர்வ அறிக்கைகளின் படி வடமாகாணத்தினுடைய 2012ஆம்ஆண்டினது மொத்த மாகாண உற்பத்தி வளர்ச்சி வீதம் 25.9இற்கு மேலே உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நீருக்குரிய கேள்வியை அதிகரிக்கும் பொருளாதார முயற்சிகளின் அளவு 60 வீதத்திற்கு மேலாகும். இது புதிய தொழில் துறை, சேவை வசதிகள் மற்றும் விவசாய அபிவிருத்தி ஆகியவற்றையே பிரதிபலிக்கின்றது.

இந்த வளர்ச்சிப் போக்கு ஏறக்குறைய அதே மாதிரியான தாக்கத்தினை நீருக்கான கேள்வி மீதும் சமகாலத்திலேயே உண்டாக்கும். யாழ். மாவட்டத்தில் நீருக்கான கேள்வியின் அதிகரிப்பு அதற்கான வளங்களை விடத் தீவிரமாக உள்ளது என்பதில் எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இந்த வளர்ச்சி வீதம் இனிவரும் உடனடியான எதிர்காலத்தில் பல்வேறு விதமான புதிய பிரச்சினைகளை நிச்சயம் ஏற்படுத்தும்.

புதிய மாற்று வழிகளைப் புதிதாகக் கண்டுபிடித்து அதற்குரிய திட்டங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்ற காலத்திற்கு முன்னராகவே நீர்வள முகாமை தொடர்பாகப் பாரிய பிரச்சினைகள் தலைதூக்குவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே கிளிநொச்சி - யாழ்ப்பாண நீர்விநியோகத் திட்டத்தினை மேலும் தாமதிக்காது அமுல் நடாத்த வழி செய்யும் வகையில் வடமாகாண சபை புத்தி பூர்வமான தீர்மானம் ஒன்றினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

வடமாகாண சபை தேர்தலின் பின்னர் தன் வழியில் தானே வந்த வாய்ப்புக்கள் பலவற்றினை ஏற்கனவே கைவிட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. வடமாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்பினைப் பாதிக்கும் இத்தகைய விடயங்களில் தீர்மானம் எடுக்கும் போது தனிப்பட்ட குறுகிய பார்வைகளுக்கு அப்பால் நின்று தீர்க்க தரிசனமான முறையில் நடந்து கொள்வதே தேவையானதாகும்.

# கிளிநொச்சி யாழ்ப்பாணம் நீர் விநியோகத் திட்டம்



JAFFNA

# ஒரு இனத்தை மற்றுமொரு இனம் மிதிப்பதை அனுமதிக்க முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டின் தலையெழுத்தை, சிறு குழுவினரிடம் கையளிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் மாகம்ருகுணுபுர மகிந்த ராஜபக்ஸ துறைமுகம் என்பவற்றில் அமைக்கபபட்டுள்ள எரிபொருள் களஞ்சிய கட்டமைப்புக்களை நேற்றுமுன்தினம் திறந்து வைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் என வேறுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாங்கள் ஒன்றிணைய வேண்டும். நாம் ஒருவரை ஒருவர் கௌரவிக்கப் பழகவேண்டும்.

அன்று தமிழ், சிங்களம் முஸ்லிம் என அனைவரையும் பயங்கரவாதிகள் கொலை செய்தனர். அன்று ஆர்ப்பாட்டம் செய்யாதவர்கள் இன்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த சிறிய சம்பவத்திற்கு பாரிய ஹர்த்தாலை முன்னெடுக்கின்றனர். ஒரு இனத்தை மற்றுமொரு இனம் மிதிப்பதை அனுமதிக்க முடியாது. இதனை நான் தெளிவாக கூறிக் கொள்கின்றேன். சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அவற்றுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளேன். இனவாதத்தைத் தூண்டிவிட இருதரப்பிலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை இரு தரப்பினரும் நிறுத்த வேண்டும். நாட்டின் தலையெழுத்தை ஒரு சிறு தரப்பினரிடம் செல்வதனை அனுமதிக்க முடியாது. இது அனைவரினதும் கடமையாகும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# நெற்பயிரைக் காப்பாற்றும் முயற்சி ஆற்று நீரை திருப்பும் விவசாயிகள்



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மகாவலி கங்கை ஆற்றின் நீரைத் தடுத்து மாவிலாறு பக்கம் திருப்புவதற்காக விவசாயிகள் மண் மூட்டைகளை அடுக்கி வருகின்றனர்.

நீரின்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், வெருகல் மற்றும் சேருவில ஆகிய பிரதேசங்களில் மட்டும் சுமார் 22 500 ஏக்கர் நெல் வேளாண்மைச் செய்கை நீரின்றி அழியும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இப்பகுதிகளில் மாவிலாறு நீரை நம்பி நெல் பயிரிட்டுள்ள தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் விவசாயிகள் தமது பயிர்களை பாதுகாப்பதற்கான முயற்ஒசிகளில் கூட்டாக ஈடுபட்டுள்ளனர். கண்டல்காடு என்னுமிடத்தில் கிளையாக பிரிந்து கடலை நோக்கிச் செல்லும் மகாவலி கங்கை நீரை தடுத்து மாவிலாறு பக்கம் திருப்புவதற்காக அந்த இடத்தில் தற்போது மண் மூடைகளை அந்த பிரதேசங்களைச் சேர்ந்த விவசாய அமைப்புக்கள் அடுக்கி வருகின்றன.

நீர்ப்பாசன இலாகாவின் அனுமதியுடனும் ஆலோசனையுடனும் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டாலும், அது எந்தளவுக்கு பலன் தரக் கூடியதாக அமையும் என தம்மால் உறுதிபடக் கூறமுடியாது என அந்த பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளில் ஒருவரான பி.மதிபாலசிங்கம் தெரிவித்தார்.

கடலுக்குச் செல்லும் மகாவலி ஆற்று நீரை மண் அணைபோட்டு தடுத்து மாவிலாறுக்கு திருப்புவதென்றால் சுமார் 8000 மண் மூடைகள் தேவைப்படுவதாக நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள் கூறுகின்றனர்.

# நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது

நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர் அளுத்கம மற்றும் பேருவளை சம்பவங்கள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முப்பதாண்டுகால யுத்தத்தை எதிர்கொண்டோம். இதனால் வடக்கு முஸ்லிம்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர்.

அத்துடன் வடக்கு தமிழர்களும் பாதிக்கப்பட்டனர். அந்த யுத்தம் நாடு முழுவதிலும் விஸ்தரித்து தலதாமாளிகை மற்றும் ஸ்ரீ மா போதிய வரை சென்றது.

எமது மக்கள் பஸ்கள் மற்றும் ரயில்களில் உயிரிழந்தனர். அந்த முப்பதாண்டு யுத்தத்திலிருந்து நாட்டை மீட்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தச் சம்பவத்தின் போது பொறுப்புடைய தேரர்கள் அவற்றை நிறுத்த நடவடிக்கை எடுத்தனர். அதேபோன்று ஏனைய மதத் தலைவர்களும் அரசாங்கத்திடம் அவற்றை கட்டுப்படுத்த செயற்பட்டனர்.



அளுத்கம சம்பவம் கவலையளிக்கின்றது. அதனுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். உலகில் மிகவும் வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் இலங்கையை பாதுகாக்க அனைவரும் முன்னின்று செயற்பட வேண்டும்.

# இனவாத வன்முறைகளைத் தடுக்க பாடம் கற்றுக்கொள்ளத் திட்டம்

இனவாத வன்முறைகளை தடுக்க ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிடம் பாடம் கற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மக்கள் மத வழிபாடுகளில் ஈடுபடுவதனை பொலிஸார் தடுக்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் இன மற்றும் மத வன்முறைகளை தடுப்பதற்காக ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் கொள்கைகளை பின்பற்றுவது குறித்து கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை அசௌகரியத்திற்கு இட்டுச்செல்லும் குறுகிய நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களில் முஸ்லிம்கள் பங்கேற்கக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா பொது வைத்தியசாலையில் உத்தியோகத்தர் ஒருங்கிணைப்புக்குழு

வவுனியா பொது வைத்தியசாலையில், உத்தியோகத்தர் ஒருங்கிணைப்பு குழு கடந்த சனிக்கிழமை உருவாக்கப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி கு.அகிலேந்திரன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா பொது வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களுக்கிடையிலான நல்லுறவை பேணுவதற்கும் நோயாளர் நலன் பேணுவதற்குமாக உத்தியோகத்தர் ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதனூடாக வவுனியா பொது வைத்தியசாலையை நாடி வரும் நோயாளர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் சேவை பாதிப்புகள் ஏற்படாமல் இருப்பதை நோக்கமாகக்கொண்டு இக் குழுவை அமைத்துள்ளோம்.

தொழிற் சங்கங்களின் போராட்டங்களின் போதும் எமது வைத்தியசாலையில் நோயாளர்களுக்கான சிறந்த சேவையை வழங்க விரும்புவதுடன் உத்தியோகத்தர்களின் நலனை இதனூடாக மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது எனத் தெரிவித்தார்.

இக் குழுவில் வைத்தியர்கள் சார்பில் பணிப்பாளர் என்ற வகையில் வைத்தியகலாநிதி கு.அகிலேந்திரன் வைத்தியர்கள் தொழிற்சங்கத்தின் சார்பில் வைத்தியகலாநிதி எம்.அனஸ் ஏனைய தொழிற் சங்கங்களின் சார்பில் அதனுடைய பிரதிநிதிகளும் நான்கு மதங்களைச் சேர்ந்த மத தலைவர்களுமாக 12 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த ஐவர் கைது

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 19 ஆம் திகதி முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகளை பூட்டி நடாத்தப்பட்ட ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்த முஸ்லிம் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் 5 உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெள்ளவத்தை பகுதியில் உள்ள முன்னணி ஆடை விற்பனை நிலையம் ஒன்றை மூடுமாறு இவர்கள் கடந்த 19 ஆம் திகதி மிரட்டியதாக வெள்ளவத்தை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய நாடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து இவர்கள கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஹபரணையில் காடு தீக்கிரை

(கொழும்பு)

மின்னேரியா, படுஓய ஹபரணை காட்டுப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தீயின் காரணமாக 3 ஏக்கர் வரையான நிலம் அழிவடைந்துள்ளது. மின்னேரியா பொலிஸ் நிலைய அதி காரிகள் மற்றும் படுஓய இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மின்னேரியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# ரணிலுக்கு சனிதோஷம் பரிகாரத்திற்கு இந்தியா பயணம்

## சிங்கள ஊடகம் தகவல்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, சனி பகவானுக்கு பூஜை செய்வதற்காக அவசரமாக இந்தியாவுககுச் சென்றுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது..

இராஜதந்திர பணிகளுக்காக செல்வதாக கூறியே, ரணில் இந்தியா சென்றுள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

சனி தோஷம் இருப்பதால், தோஷத்தைப் போக்க உடனடியாக சனிஸ்வர பகவானுக்கு பூஜைகளை செய்யுமாறு எதிர்க் கட்சித் தலைவருக்கு அவரது சோதிடர்கள் ஆலோசனை வழங்கியி ருந்தனர்.

இந்த ஆலோசனையின் படி கடந்த 20 ஆம் திகதி இந்தியா சென்ற ரணில், இன்று நாடு திரும்பவுள்ளார். சனஸ்வர பகவான் ஆலயம் தமிழகத்தின் திருநள்ளாறு பிரதேசத்தில் இருக்கின்றது. இதுவே உலகில் இருக்கும் ஒரே ஒரு சனீஸ்வர பகவான் ஆலயம் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்பள்ளிகளின் வளர்ச்சிக்காக உழைத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் தவராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் முன்பள்ளிகளின் வளர்ச்சிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களின் உயர்வுக்குமாக முன்னின்று உழைத்தவர்கள் ஈ.பி.டி.பி.கட்சியை சார்ந்தவர்களும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுமே என துன்னாலை வடக்கு, போதராமடம் முன்பள்ளியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விளையாட்டு விழா நிகழ்வின் போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் கூறிய'நாவது,

சிறுவர்கள் முன்பள்ளிகளில் பழகும் பழக்க வழக்கங்கள் மற்றும் கற்பதற்கான ஆரம்ப நெறிமுறைகள் என்பன அவர்களது பிற்கால கல்வி வளர்ச்சிக்கும் அவர்களுடைய வாழ்வியல் பழக்க வழக்கங்களுக்கும் அடிப்படையாக அமைகின்றன. ஆதலினால் முன்பள்ளிகள் தகுந்த கல்விச் சூழலை கொணடிருத்தல் வேண்டும். ஆனால் எமது உயர் கல்வி ஸ்தாபனங்களின் கல்விச் சூழலை மேம்படுத்துவதற்கு அரச பணம் நிறைய செலவழிக்கப்படும். அதேவேளை முன்பள்ளிகளின் கல்விச் சூழலை மேம்படுத்துவதற்கு அரச பணம் செலவழிக்கப்படுவதில்லை. மேலத்தேய நாடுகளில் முன்பள்ளிகள் ஏனைய கல்வி நிலையங்களின் தராதரத்திற்கு சமமாக பேணப்படுகின்றது.

ஆனால் துரதிஷ்டவசமாக எமது நாட்டில் அவ்வாறாக முன்பள்ளிகள் கவனிக்கப்படுவதில்லை.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் உள்ள பல முன்பள்ளிகளின் பௌதீக விருத்திக்கு அவர் நிறைய பணங்களை வழங்கி உதவி செய்துள்ளார் என்றார்.

அது மட்டுமல்ல முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓர் கொடுப்பனவை வழங்குவதற்குரிய திட்டம் இலங்கையிலேயே வடமாகாணத்தில் மட்டும்தான் நடைமுறையில் உள்ளது.

இதனை வடமாகாண சபை ஆளுநர் ஊடாக நடைமுறைக்கு கொண்டு வந்தவர் எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஆனால் இன்று வடமாகாண சபையை பொறுப்பேற்று இருப்பவர்கள் இன்னும் மேலதிக கொடுப்பனவை கொடுபபதற்குரிய வழிமுறைகளை செய்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் செயல் திறனற்றவர்களாக இருப்பதனால் வடமாகாண சபை இன்று ஓர் சம்பந்தமில்லா விடயங்களுக்கு தீர்மானம் எடுக்கும் சபையாக மட்டுமே உள்ளது. வடக்கில் உள்ள மக்கள் பிழையானவர்களை தேர்ந்தெடுத்ததால் நடக்கும் விளைவு இது. இனி வரும் காலத்திலாவது அவர்கள் சரியானவர்களை தேர்ந்தெடுப்பார்கள் என நம்புகின்றேன்.

## "பண்படு கலாசார விழிப்புணர்வு" தெருவெளி ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினரால் யாழ். மாவட்டத்திலுள்ள கிராமங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் தோறும் 100 ஆற்றுகைகளுக்கு மேல் ஆற்றுகை செய்யப்பட்ட பண்படு கலாசார விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை ரூபவாஹினி தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.

இதற்கான ஆற்றுகை ஒளிப்பதிவு ரூபவாஹினி தொலைக் காட்சிக் குழுவினரால் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

பண்படு தெருவெளி ஆற்றுகைக்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை புத்தாக்க அரங்க இயக்கத்தினைச் சேர்ந்த எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தார்கள்.

ஆற்றுகையாளர்களாக ஜே.சானுஜன், சு.கலைக்சன், தி.தனுஜன், தி.திஸ்னுகன், தி.திலக்சன், உ.ஹரீஸ், பா.ஜெயரூபன், ச.குபேரன், எஸ்.சஞ்சயன், தி.திலக்சன், நா.மோகனராஜன், பா.தாருசன், செ.அகிலன், அ.சதீசன் ஆகியோர் நடித்திருந்தார்கள். (63)

# பொன்விழா ஆயத்தக் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)


வலி.தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் பொன்விழாவுக்கான ஆயத்த கலந்துரையாடல் நேறறு முன்தினம் இடம்பெற்றது.

சுன்னாகம் பொது நூலகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி இடம்பெறவுள்ளமையினால் அந்நிகழ்வினைச் சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிடுதல், போட்டிகளை நடாத்துதல், விழாவினை சிறந்த முறையில் நடாத்துதல் போன்றன தொடர்பாகவும் அந்நிகழ்வினை நடாத்துவதற்கான குழவினைத் தெரிவு செய்யும் முகமாகவும் இக் கலந்துரையாடல் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலி.தெற்கு பிரதேச சபைத்தவிசாளர் தி.பிரகாஸ தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் போட்டிகளினை நடாத்துவதற்கான கலை 'கலாசாரக்குழு, நிதி திரட்டுவதற்கான நிதிக்குழு, மலர ஆகிய குழுக்கள் பிரதேச சபைத்தலைவரைத் தலைவராகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேசசபை பொது நூலக உத்தியோகத்தர்கள், சுன்னாகம் பொது நூலக வாசகர் வட்ட உறுப்பினர்கள், துறைசார்ந்த அறிஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (63)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவு கழகத்தால். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய அரங்கில் கழகத்தின் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கனடாவைச் சேர்ந்த கைதடி நலன்விரும்பி ஒருவர் இந்த கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். கைதடியிலுள்ள வளர்மதி சனசமூக நிலையம், நவசனசமூக நிலையம், கைதடி தெற்கு சனசமூக நில்லையம், சரஸ்வதி சன சமூக நிலையம், செல்வா சனசமூக நிலையம், நாவற்குழி சனசமூக நிலையம், உதயதாரகை சனசமூக நிலையம் ஆகிய வற்றைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கற்றல் உபகரண நன்கொடையை பெற்றனர். (90, 51)

# முரசின் இன்றைய பலன்

(24.06.2014 செவ்வாய்க்கிழமை)



ஐய வருஷம் ஆனிமாதம் 10 ஆம் திகதி.
துவாதசி / சித்தாமிர்தம்.
கார்த்திகை நட்சத்திரம் பி.இ. 01.59 வரை. பின் ரோகினி.
இராகு காலம 02.55 -04.25 வரை. சுபநேரம 10.25 - 11.55 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளியூர் பயணம் மேற்கொள்ள சந்தர்ப்பம் இருந்தும் குடும்பநிமை பாதகமாக இருப்பதினால் கைவிடல், மனைகட்டி முழக்க பணத்தட்டுப்பாடு ஏற்படல். |
| ரிஷபம் | தாயாரின் தேகநலம் பற்றிய கவலை ஆவணம் சிதைந்ததினால் புதிதாகப் பெறவிண்ணப்பம் மேற்கொள்ளல். |
| மிதுனம் | சொந்த அலுவல்கள் நிமித்தம் அலைச்சல் ஏற்பட்டதால் தேகநலம் பாதித்தல், புதிய கடன்களை வாங்கி பொருளாதாரச் சுமையை ஏற்ற முயலவேண்டாம். |
| கடகம் | கொடுக்கல் வாங்கல்களை உறுதியுடன் நிதானித்து மேற்கொள்ள வேண்டும், விவாக முயற்சி பகீரதப்பிரயத்தனத்தின் பின் நிறைவேறல். |
| சிம்மம் | விவாக சம்பந்தமாக முடிவெடுத்தல், வெளியூரினின்றும் உறவுகள் வருகைதந்து இன்ப அதிர்ச்சி தக்க வைத்தல். |
| கன்னி | சொத்துச் சம்பந்தமாக நீண்ட நாள் நிலவிக் காணப்பட்ட பிரச்சினை நல்ல தீர்ப்புக்குவருதல், தொழில் சம்பந்தமாக எதிர்பாராத உள்ளூர் பயணம் ஏற்படும். |
| துலாம் | மக்களின் தேவைகளை நிறைவேற்றுமுகமாக பிதாவின் கருணை ஏற்படல், பிறரை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைக்க முன் ஆலோசனை செய்யவும். |
| விருச்சிகம் | பிள்ளையைக் கண்டித்ததால் குடும்பத்தில் ரகளை ஏற்படல், கவலை மனதை வாட்டுதல். |
| தனுசு | அசாதாரண வேகம் கட்டுப்பாட்டை மீறி விபத்தினை ஏற்படுத்தும் அபாய வரல், வாழ்வில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். |
| மகரம் | காலாவதியான திகதிக்குரிய பொருளைப்பெற்றதால் ரகளை ஏற்படல், புதிய இடத்தில் வியாபார நிலையமொன்று திறக்க முனைதல். |
| கும்பம் | அநாமதேய தொலைபேசிச் செய்தியால் உளப்பாதிப்பும் பதகளிப்பும் ஏற்படல், புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திட பணமுடை தடங்கலாக இருத்தல். |
| மீனம் | வெளிநாடுகளில் மாணவர் விசாகிட்டும் யோகம் ஏற்பட்டு மனம் மகிழ்வீர்கள், நோய் குணமடைய சத்திர சிகிச்சை அவசியம் என்பதை மருத்துவர் தெளிவுபடுத்தல். |

# உலகக் கிண்ண கால்பந்தாட்டத் திருவிழா



## அல்ஜீரியா கோல் மழை

தென்கொரிய அணிக்கெதிரான போட்டியில் கோல் மழை பொழிந்து அசத்திய அல்ஜீரிய அணி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை பிரகாசப்படுத்தியுள்ளது.

தென் கொரிய, அல்ஜீரிய அணிகளுக்கிடையிலான ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 12.30 மணிக்கு நடைபெற்றது.

ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே தென்கொரிய அணியின் சி. ஒய் பார்க் பவுல் செய்தார். ஆட்டத்தின் 26ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் ஸ்லிமானி முதல் கோலை அடித்து தங்கள் அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார்.

அடுத்த 2ஆவது நிமிடத்திலேயே அல்ஜீரியாவின் ஹெலிச்சி மற்றொரு கோலை அடித்தார். மீண்டும் ஆட்டத்தின் 38ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் ட்ஜாபாவ் தன் பங்குக்கு ஒரு கோல் அடித்து அசத்தினார். முதல் பாதி ஆட்டம் முடிந்த போது அல்ஜீரியா மூன்று கோல்களையும் கொரியா கோல் எதுவும் அடிக்காமலும் களத்தில் இருந்தன. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்தில் தென் கொரிய அணியின் சன் ஒரு கோல் அடித்து அந்த அணிக்கு ஆறுதல் கொடுத்தார்.

ஆட்டத்தின் 62ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் பிராஹிமி மீண்டும் ஒரு கோல் அடித்து தனது அணியின் கோல் கணக்கை 4 ஆக உயர்த்தினார். 72ஆவது நிமிடத்தில் தென்கொரியாவின் கூ அடித்த கோலால் அந்த அணியின் கோல் கணக்கு 2 ஆக உயர்ந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தின் முடிவில் தென் கொரியா மேலும் எந்த ஒரு கோலும் அடிக்காததால் 4 – 2 என்ற கோல் கணக்கில் அல்ஜீரியா வெற்றி பெற்றது. அல்ஜீரியாவின் முன் கள ஆட்டக்காரரான ஸ்லிமானி ஆட்ட நாயனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## போராடி சமநிலை செய்தது போர்த்துக்கல்



அமெரிக்க அணிக்கெதிரான லீக் ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி இறுதி நேரத்தில் சிறப்பான செயற்பட்டு போட்டியை சமநிலை செய்துள்ளது. 20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் போர்த்துக்கல், அமெரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நடைபெற்றது. இதில் போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிரிஸ்டியானோ ரொனால்டோவின் ஆட்டத்தை காண இரசிகர்கள் ஆவலுடன் அரேனா அமேசோனியா மைதானத்தில் திரண்டிருந்தனர்.

ஆரம்பம் முதலே உற்சாகமாக இரு அணிகளும் ஆடி வந்த நிலையில் ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் முதல் கோலை அடித்து போர்த்துக்கல் வீரர் நானி தனது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்தார். ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் அமெரிக்க வீரர் டெம்ப்சி கோல் போஸ்டில் அடித்த பந்தை போர்த்துக்கல் வீரர்கள் லாவகமாக தடுத்தனர். ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் மீண்டும் நானி அடித்த பந்தை அமெரிக்காவின் ஹோவர்ட் கோல் எல்லைக்குள் நுழைய விடாமல் தடுத்தார்.

இந்தச் சூழலில் முதல் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் நடைபெற்றபோது போர்த்துக்கல் அணியில் அல்மீடாவுக்கு பதிலாக வில்லியம் களமிறங்கினார். ஆட்டத்தின் 47ஆவது நிமிடத்தில் ரோனால்டோ கோலை நோக்கி அடித்த பந்தை அமெரிக்க வீரர் பெஸ்லர் தடுத்தார். ஆட்டத்தின் 64ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் ஜெர்மெய்ன் ஜோன்ஸ் அற்புதமான கோல் அடித்து கோல் கணக்கை சமன் செய்தார். மீண்டும் ஆட்டத்தின் 81ஆவது நிமிடத்தில் அமெரிக்க கப்டன் கிளிண்ட் டெம்ப்ஸி ஒரு கோல் அடிக்க 2 –1 என்ற கோல் கணக்கில் அமெரிக்கா முன்னிலை பெற்றது. போர்த்துக்கல் அணியின் ரோனால்டோ ஆட்டத்தின் 87ஆவது நிமிடத்தில் அடித்த பந்தை கோல் காப்பாளர் ஹோவார்ட் லாவகமாகத் தடுத்துவிட்டார். இரண்டாவது பாதி ஆட்டம் நிறைவடைந்த நிலையில் 5 நிமிடம் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது. கூடுதல் நேரத்தில் 4 நிமிடங்கள் முடிந்த நிலையிலும் கூட போர்த்துக்கல் அணி கோல் அடிக்கவில்லை. ஆட்டம் முடிய ஒரு நிமிடமே எஞ்சியிருந்த நிலையில் போர்த்துக்கல் அணியின் வாரேலா சிறப்பு மிக்க கோலை அடித்து கோல் கணக்கையும் சமன் செய்து ஆட்டத்தை சமநிலை செய்தார். ஆட்டநாயகனாக அமெரிக்க கோல் காப்பாளர் ஹோவார்ட் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டம்

இத்தாலி எதிர் உருகுவே
இலங்கை நேரம் இரவு 9.30

கோஸ்டாரிகா எதிர் இங்கிலாந்து
இலங்கை நேரம் இரவு 9.30

ஜப்பான் எதிர் கொலம்பியா
இலங்கை நேரம் அதிகாலை 1.30

கிரீஸ் எதிர் ஐவரி கோஸ்ட்
இலங்கை நேரம் அதிகாலை 1.30

## பீலே புறக்கணிப்பு

பிரேசிலில் தலைசிறந்த கால்பந்து வீரர்களுக்கு பஞ்சம் இல்லை. ஆனால், கால்பந்தில் பிரேசில் கோலோச்சும் என்பதை உலக அரங்கில் அழுத்தமாக உணர்த்தியவர் பீலே. பிரேசிலுக்காக மூன்று முறை உலகக் கோப்பை வென்று தந்தவர். கால்பந்தின் பிதாமகன் என போற்றப்படுபவர்.

அப்பேர்பட்டவரின் சொந்த மண்ணில் அரை நூற்றாண்டுக்குப் பின் உலகக் கோப்பை நடைபெறுகிறது. ஆனால், வையகம் போற்றும் அந்த ஜாம்பவானை பிரேசிலும் சரி, உலகக் கால்பந்து சம்மேளனமும் சரி பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

சா பாலோவில் தொடக்க விழா நடைபெற்றது. பிரேசில் அதிபர் டில்மா ரூசெப் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கூடியிருந்தனர். ஆனால், பீலேவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இத்தனைக்கும் சா பாலோவுக்கு மிக அருகில் உள்ள சான்டோஸ் நகரில்தான் பீலே வசித்து வருகிறார்.

யூலை 13ஆம் திகதி சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு பிரேசிலைச் சேர்ந்த மொடல் அழகி கிஸ்லே பண்ட்சென் கோப்பை வழங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதை விட பீலேவை வேறெந்த விதத்திலும் அவமதித்து விட முடியாது என கொதிக்கின்றனர் அவர் இரசிகர்கள்.

## களத்திற்கு வெளியில்...

ஜேர்மனியின் குளோஸ் அதிக கோல்கள் அடித்துள்ள சாதனை பட்டியலில் இணைந்திருப்பதை வரவேற்கிறேன். நீங்கள் (குளோஸ்) எந்த அளவுக்கு சந்தோசத்தில் இருப்பீர்கள் என்பதை என்னால் கற்பனை மட்டுமே செய்து பார்க்க முடியும். இது அற்புதமான உலகக் கிண்ணத் தொடர். அனுபவித்து விளையாடுங்கள்.

**றொனால்டோ (பிரேசில் முன்னாள் வீரர்)**

வெற்றி பெற்ற அணியில் இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். போட்டியின் ஆரம்பத்தில் இருந்து ஆடினேனா? இல்லையா என்பது விடயம் அல்ல. உலகக் கிண்ணத் தொடரில் 20 ஆட்டங்களில் பங்கேற்று 15 கோல்கள் அடித்தது என்பது மோசமானது அல்ல.

**மிரோஸ்லவ் க்ளோஸ் (ஜேர்மனி வீரர்)**

உலகக் கிண்ணத் தொடரில் வெற்றி பெற்று 16 ஆண்டுகள் ஆகிறது என்பதை அறிந்திருந்தோம். ஈரானுக்கு எதிரான ஆட்டம் கோல் அடிக்கப்படாமல் சமநிலையானதில் இரசிகர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பர். தற்போது போஸ்னியா அணிக்கெதிரான வெற்றி அவர்களுக்கு உற்சாகம் அளித்திருக்கும். ஆர்ஜென்ரீன அணிக்கெதிரான போட்டியில் எமது முழுத் திறனையும் வெளிப்படுத்தி அணியை வெற்றிபெற முயற்சிப்போம்.

**பீற்றர் ஓடெம்விங்கீ (நைஜீரியா வீரர்)**

கானா அணிக்கெதிரான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்த போது வீரர்கள் மிகவும் சோர்வடைந்து விட்டனர். கடைசியாக எங்களுக்கு சில வாய்ப்புகள் கிடைத்தன. திறமை மற்றும் கூட்டு முயற்சியுடன் செயற்பட்டு கோல் அடித்தோம். பின்னடைவில் இருந்து மீண்டு வந்து ஆட்டத்தை சமன் செய்ததில் மகிழ்ச்சி.

**ஜோசிம் லியோ (ஜேர்மனி பயிற்சியாளர்)**

## வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளம் நேற்று ஆரம்பம்







வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி நேற்று துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். நேற்றைய தினம் சுவட்டு நிகழ்ச்சிகளின் தெரிவுப் போட்டிகளும், மைதான நிகழ்வுகளும் நடைபெற்றது. இப்போட்டி நிகழ்வின் போது மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. வடக்கு மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், ஒலிம்பிக் சம்பியன் எதிர்வீரசிங்கம், மாகாண சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி, பா, 25, 12)

PUBLIC ... JAFFNA.



# அரியாலை ஐக்கியம், யாழ். பல்கலை அணிகள் சம்பியன்






(அரியாலை)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கியம், யாழ். பல்கலைக்கழக அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

இந்தச் சுற்றுப்போட்டித் தொடரில் இறுதி ஆட்டங்கள் கடந்த 21ஆம் திகதி அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும், அரியாலை ஐக்கிய அணி மோதின.

நான்கு சுற்றுக்கள்ாக (ஒவ்வொன்றும் 15 நிமிடங்கள்) நடைபெற்ற இச்சுற்றுப்போட்டியின் முதற் சுற்றினை அரியாலை ஐக்கிய அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. இரண்டாவது சுற்று 12:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் முடிவடைந்தது. மூன்றாவது சுற்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 11:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்ற, போட்டி விறுவிறுப்படைந்தது.

எனினும் நான்காவது சுற்றில் தமது முழுப்பலத்தினையும் வெளிப்படுத்திய அரியாலை ஜக்கிய அணி 15:11 அடிப்படையில் வென்றது. இறுதியில் அரியாலை ஜக்கிய அணி 51:45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கலப்பு (ஆண் - பெண்) வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியும் அரியாலை ஜக்கிய அணியும் மோதின.

இரண்டு சுற்றுக்களாக (ஒவ்வொன்றும் 20 நிமிடங்கள்) நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதற்சுற்றினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 17:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

இருந்தும், இரண்டாவது சுற்றில் மிகுந்த போராட்டத்தினை வெளிப்படுத்திய அரியாலை ஜக்கிய அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது. எனினும் மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி 28:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (12)

## விளையாட்டுச் செய்திகள்

## முடிவை நோக்கி லீட்ஸ் டெஸ்ட்

(லீட்ஸ்)

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி விறுவிறுப்பான நிலையை நோக்கிச் செல்கின்றது.

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் லீட்ஸில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 356 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரொபின்ஷன் 127, மட் ப்ரியர் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரங்க, மத்தியூஸ் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

108 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நான்கு விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் சங்கக்கார 55 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் மஹேல ஜெயவர்த்தன 55, மத்தியூஸ் 24 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். பந்து வீச்சில் அலி இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இலங்கை அணி 106 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

## பிறைற் ஸ்ரார், மனோகரா 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்

(இளவாலை)

ஹென்றீசியன் பிறீமியர் லீக் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார், அல்வாய் மனோகரா அணிகள் முன்னேறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடாத்தி வரும் ஹென்றீசியன் பிறீமியர்லீக் மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 22ஆம் திகதி இரு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் பண்டத்தரிப்பு பிறைற் ஸ்ரார் அணியும், மாவத்தை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில்தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பிறைற் ஸ்ரார் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் அல்வாய் மனோகரா அணியும், அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய அல்வாய் மனோகரா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (48)

## கோல் தலைநகர்

உலக கோப்பைப் போட்டி நடந்து வரும் பிரேசிலின் 12 மைதானங்களில், சால்வடார் பான்டி நோவா மைதானம் கோல் தலைநகரமாக உருவெடுத்துள்ளது. நேற்று முன்தினம் வரை நடைபெற்றுள்ள 3 போட்டிகளில் மொத்தம் 17 கோல் அடிக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பியன் ஸ்பெயின் அணியுடன் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து 5–1 என்ற கோல் கணக்கிலும், ஜேர்மனி அணி 4–0 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணியையும் பந்தாடிய நிலையில், பிரான்ஸ் அணி 5–2 என்ற கோல் கணக்கில் சுவிஸ் அணியை வீழ்த்தியுள்ளது.

## இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்ற அணிகள்

(கோப்பாய்)

யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து, அச்சுவேலை கலைமகள், சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

ஆண்களுக்கான போட்டிகள் இரு பிரிவுகளாக நடைபெற்றன. ஏ பிரிவுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் அச்சுவேலி விக்னேஸ்வரா அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பி பிரிவுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் அச்சவேலி கலைமகள் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின. இதில் அச்சவேலி கலைமகள் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் இளவாலை அணியும் சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ அணியும் மோதின. இதில் சண்டிலிப்பாய் வசந்தஶ்ரீ அ ணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டித் தொடரில் இறுதி ஆட்டங்கள் விரைவில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று யாழ். பல்கலைக்கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)



## ஜே.பி.எல். ருவென்ரி-20 இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி.

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி மைானத்தில் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்க[illegible] நடைபெற்று வருகின்றது.

நாண[illegible]ச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி நோபேட், லிவிங்டன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் உமாகாந், ஜெயரூபன், யனுதாஸ் ஆகியோர் பொறுப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கை[illegible] கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 19.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உமாகாந் 27, ஜெயரூபன் 13, யனுதாஸ் 11, பிரதீபன், பங்குஜன் ஆகியோர் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நோபேட் நான்கு, லிவிங்டன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை விரைவாகப் பறிகொடுத்து வந்தது. அனைத்து வீரர்களும் வருவதும் போவதுமாக தங்களது விக்கெட்டுக்களை விரைவாகத் தாரைவார்த்து களத்தைவிட்டு வெளியேற்றப்பட்டனர். இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 16.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ரியூடர் 14, கிளிங்டன் 10, அஜித்டார்வின் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யனுதாஸ் மூன்று, ராகுலன், பவிதரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக யனுதாஸ் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் கொக்குவில் கே.சி.சி.சி. இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. முதலாவது ஜே.பி.எல். ருவென்ரி-20 தொடரில் கே.சி.சி.சி. அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

JAFFNA

# இலங்கையின் மாகாணசபைகளை மக்களுக்குப் பயனுடையவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!

5

- வரதராஜப்பெருமாள்

13ஆவது அரசியல் யாப்பு திருத்த ஏற்பாடுகளின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையே மாகாண அரசாங்கம். இந்த அமைச்சரவையின் தலைவர் மாகாண முதலமைச்சரே தவிர ஆளுநர் அல்ல.

சுதந்திர இலங்கையில் 1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு வரும் வரை இலங்கையின் மகாதேசாதிபதியாக இருந்தவரே இலங்கை அரசின் தலைவராக இருந்தார். அவர் இங்கிலாந்து மகாராணியின் பிரதிநிதியாக இருந்தார். ஆயினும் இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையே இலங்கையின் அரசாங்கமாக இருந்தது. 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசாக ஆக்கப்பட்டதோடு சம்பிரதாய பூர்வமாக இங்கிலாந்தோடு இருந்த அரசியல் யாப்புத் தொடர்புகள் முற்றாக நீக்கப்பட்டன. 1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி இலங்கையின் ஜனாதிபதியே இலங்கையின் அரச தலைவராக இருந்தார். எனினும் இலங்கையின் அரசாங்கமாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையும் அதன் தலைவரே இலங்கையின் பிரதமர் எனவும் இருந்தது.

இங்கு ஓர் அரசுக்கும் மற்றும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள அடிப்படை வேறுபாட்டைப் புரிந்து கொள்வது அரசறிவியலுக்கு அவசியமாகும்.

இறைமை ஆதிக்கம் கொண்டிருந்த இங்கிலாந்து மகாராஜாக்களுக்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்களின் காரணமாக மகாராஜாக்களின் கைகளிலிருந்து அரச அதிகாரங்கள் மக்களின் பிரதிநிதிகளுக்கு மாறின. அதன் விளைவாக இங்கிலாந்து மகாராஜாக்கள் அல்லது மகாராணிகள் வெறுமனே பெயரளவிலான அந்தஸ்துக்கு உரியவர்களானார்கள்.

இங்கிலாந்து மகாராணியிடம் நிறைவேற்றதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அவர்களின் அரசியல் யாப்பு கூறினாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவையின் முடிவுகளுக்கு அமையவே அந்த நிறைவேற்றதிகாரங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். அமைச்சரவையின் முடிவுகளே நிறைவேற்றதிகார முடிவுகள்.

இதுவே இங்கிலாந்தில், கனடாவில், அவுஸ்திரேலியாவில் மற்றும் இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது. அதே பாரம்பரியத்திலேயே இந்தியா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள மாகாணங்களில் ஆளுநர் மற்றும் மாகாண அமைச்சரவைக்கு இடையே உள்ள உறவுகளும் அமைந்துள்ளன.

இலங்கையின் மாகாண சபைகள் தொடர்பான 13ஆவது அரசியல் யாப்பு திருத்த ஏற்பாடுகள் வசனத்துக்கு வசனம் சொல்லுக்குச் சொல்லு இந்திய மாநில அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட வகையாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கனடாவில் மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள மாகாண ஆட்சிகளுக்கு உள்ள அரசியல் யாப்பு ஏற்பாடுகளை ஏறத்தாழ ஒத்த கருத்துடையாகவே இலங்கையின் அரசியல் யாப்பிலும் அடிப்படை விதிகள் உள்ளன.

எனவே இந்திய, அவுஸ்திரேலிய மற்றும் கனடிய மாகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையே மாகாண அரசாங்கமாக இருக்கும் போது அதேவகையான அரசியல் யாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட இலங்கையில் மட்டும் மாகாண அமைச்சரவையானது நிறைவேற்றதிகாரங்கள் எதுவுமே அற்ற, வெறுமனே ஆளுநருக்கு ஆலோசனை வழங்கும் சபையாக மட்டுமே என எவ்வாறு அமைய முடியும்.

இலங்கையின் நீதிமன்றங்களும் இங்கிலாந்து சட்ட பாரம்பரியங்களை ஏற்றே இன்று வரை அனைத்து விடயங்களிலும் தீர்ப்பு வழங்கி வருகின்றன.

எனவே மாகாண அமைச்சரவையின் நிறைவேற்றதிகாரம் தொடர்பான விடயங்கள் இலங்கையின் உச்சநீதி மன்றத்தினால் பரிசோதிக்கப் படுமானால், இங்கும் இங்கிலாந்து, இந்திய, அவுஸ்திரேலிய, கனடிய சட்ட பாரம்பரியங்கள் மற்றும் அவை தொடர்பான கடந்த காலத் தீர்ப்புகள் ஆகியவை கவனத்துக்கு எடுக்கப்பட்டே இலங்கையின் உச்ச நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக திரு சம்பந்தன் அவர்களுக்கோ அல்லது கௌரவ முன்னாள் நீதியரசரும் இந்நாள் முதலமைச்சருமான திரு விக்கினேஸ்வரன் அவர்களுக்கோ சட்ட ஆலோசனை வழங்கும் அளவுக்கோ அல்லது இவர்களை நோக்கி சட்ட விடயங்கள் தொடர்பாக கேள்வி எழுப்பும் அளவுக்கோ நான் அறிவுடையவன் அல்ல.

இங்கு யார் பூனைக்கு மணி கட்டுவது என்ற கேள்விக்கே இடமில்லை.

மாகாண அமைச்சரவையின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக நீதி கேட்டு உச்சநீதிமன்றத்தில் மணி அடிக்கும் கடமையும் பொறுப்பும் தகுதியும் திரு விக்கினேஸ்வரன் அவர்களுக்கே உரியது.

அதற்கான வசதியும் வாய்ப்பும் மக்களாணையும் அவருக்கே மக்களால் வழங்கப்பட்டிருக்கின்றது.

**மாகாண அமைச்சரவையின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக நீதி கேட்டு உச்சநீதிமன்றத்தில் மணி அடிக்கும் கடமையும் பொறுப்பும் தகுதியும் திரு விக்கினேஸ்வரன் அவர்களுக்கே உரியது. அதற்கான வசதியும் வாய்ப்பும் மக்களாணையும் அவருக்கே மக்களால் வழங்கப்பட்டிருக்கின்றது.**



நாளை கிடைக்கக் கூடுமென இருக்கும் பலாக்காயை விட கையிலிருக்கும் களாக்காய் பயன் தருவது நிச்சயமானது என்பது பழமொழி. அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுவே பிரதானம்.

இந்தத் தொடருக்கான தலையங்கத்துக்கு உரிய பதிலை "ஆம்" அல்லது "இல்லை" என்ற அறுதியிட்டுக் கூறும் வடிவில் தருவது எனது நோக்கமாக இருக்கவில்லை.

மாறாக, இலங்கையில் நடைமுறையில் இருக்கும் மாகாண சபைகளை, தமிழர்களின் நலன்களுக்காகப் பயன்படுத்துவதற்கு வேண்டிய முன்னெடுப்புகளை மேற்கொள்வது அவசியமா? அல்லது இல்லையா?

வடக்கு மாகாணசபைக்கு பெரும்பான்மையாக மக்களால் தெரிவு செய்யப்பப்பட்டு ஆட்சியமைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்கள் ஏதாவது அவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுகிறார்களா?

எவ்வளவு தூரம் ததேகூக்காரர்கள் அக்கறையோடு மேற்கொள்கிறார்கள்?

அல்லது எதுவுமே முயற்சிக்காமல் மஹிந்தவின் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியபடி ததேகூக்காரர்கள் அடுத்த மாகாணசபைத் தேர்தல் வரை காலத்தைக் கடத்துகிறார்களா? அல்லது மாகாண சபையால் எதுவும் செய்ய முடியாது என ததேக்கூக்காரர்கள் இருக்கிறார்களா?

அல்லது அவர்கள் மாகாண சபையால் மக்களுக்குப் பயனுடையதாக எதுவுமே செய்து விடக்கூடாது என இருக்கிறார்களா?

என உங்களை நோக்கி கேள்விகளை எழுப்பி அதற்கான பதில்களை நீங்கள் கண்டு பிடிக்கவும் தெளிவான அரசியற் புரிதல்களைப் பெறுவதற்குமென உங்களது சிந்தனைகளைத் தூண்டுவதே எனது நோக்கம்.

(தொடரும்)

[சிறுவர் கதை]

மரக்கிளையின் உச்சியில் இருந்த அந்தச் சின்னஞ்சிறு பறவையின் கூட்டில் இரண்டு குஞ்சுகள் இருந்தன. தாய்ப்பறவை எங்கோ சென்று இரைதேடிக்கொண்டு தன் குஞ்சுகளுக்குப் புகட்ட திரும்பி வந்தபோது திடுக்கிட்டு அலறியது.

ஒரு பாம்பு மெதுவாக ஊர்ந்தபடி அந்தக் கூட்டை நெருங்கியது. அந்தப் பறவைக் குஞ்சுகளை உண்பது அதன் நோக்கம்.

தாய்ப்பறவையால் அந்தப் பாம்பை என்ன செய்ய முடியும்? பாம்பண்ணா! பாம்பண்ணா! என்று அலறியது.

பாம்பு அதைச் சட்டை செய்யவில்லை.

பாம்பண்ணா! பாம்பண்ணா! ஒரு நிமிஷம் நான் சொல்வதைக் கேளுங்கள்! மீண்டும் மீண்டும் தாய்ப்பறவை அலறியது.

திரும்பிப் பார்த்த பாம்பு, 'ஏன் எதற்காகக் கத்துகிறாய்?' என்றது.

'அண்ணா! நீங்கள் எவ்வளவு பெரியவர்! உங்களைக் கண்டு பயந்து கொண்டிருக்கும் எங்கள் மேல் நீங்கள் இரக்கப்படக் கூடாதா?'

'அப்படியா?'

'அண்ணா என் குழந்தைகளை விட்டுவிடுங்கள்! நாங்கள் பிழைத்துக் கொள்கிறோம்'

'நான் கேட்பதற்குச் சரியான பதிலைச் சொல்லிவிட்டால் நான் உன் குழந்தைகளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறேன்'

'கேளுங்கள் அண்ணா'

'உன் வாயில் தற்போது என்ன வைத்திருக்கிறாய்?'

'என் குஞ்சுகளுக்குச் சிறிது இரை கொண்டு வந்திருக்கிறேன் அண்ணா'

'என்ன இரை அது?'

'சின்னப் புழுக்கள் அண்ணா!'

'உன் குழந்தைகளின் இரைக்காகச் சென்ற நீ அந்தப் புழுக்களுக்கு இரக்கம் காட்டவில்லை... ஆனால், என்னிடம் மட்டும் இரக்கம் காட்டச் சொல்கிறாயே...'

பாம்பு கேட்ட அந்தக் கேள்விக்கு அந்தப் பறவையால் எந்தப் பதிலும் சொல்ல முடியவில்லை.

'இதுதான் நமது வாழ்க்கை விதி! உன்னைவிட பலம் குறைந்தது உனக்கு இரையாகிறது. என்னைவிட பலம் குறைந்தது எனக்கு இரையாகிறது. இப்படி இல்லாமல் தானே உற்பத்தி செய்து வாழ வழி இருக்கிறவர்கள் மனிதர்கள்தான். ஆனால், அவர்களே அப்படி வாழ்வதில்லை. பல உயிரினங்களைக் கொன்று உண்டுதான் வாழ்ந்து வருகிறார்கள்... இப்படிப்பட்ட சூழலில் என்னை இரக்கம் காட்டச் சொல்வது சரிதானா? நீயே யோசித்துக் கொள். இன்று நீ என்னை அண்ணா என்று அன்போடு பலமுறை அழைத்தாய், அந்த மகிழ்ச்சியில் இன்று உன் குழந்தைகளுக்கு எந்த ஆபத்தையும் நான் செய்யப் போவதில்லை. என் பசிக்கு நான் வேறு வழியைப் பார்த்துக் கொள்கிறேன்' என்றபடி அந்தப் பாம்பு போய்விட்டது.

பாம்பு சென்ற அந்தத் திசையைப் பார்த்துத் திகைத்து நின்றது தாய்ப்பறவை!



மனிதர்களிடமே இரக்கமில்லை!

# நாத்திகரா, போடு இரட்டைத் தாழ்ப்பாள்!

அறுபதுகளில் அமெரிக்கச் சமூகம் இரண்டாம் உலக யுத்தத்தால் அமெரிக்காவிற்குக் கிட்டிய உலகப் பேரரசு என்ற அந்தஸ்தைப் படிப்படியாக இழப்பது எப்படி என்று யோசித்து செயல்பட்டுக் கொண்டிருந்தது. பெருவாரி மக்களின் மேம்படுதலைத் தேடுவது என்பது உலகிலேயே, பல நூறாண்டுகளிலேயே, மிகச் சிலராலேயே, மிகச் சில நேரங்களிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அமெரிக்கா உலகப் போர் முடிந்து வெற்றிக் களிப்பிலும், களைப்பிலும் ஒரு பத்தாண்டுகளைக் கழித்து விட்டுத் தேறுகையில், படிப்படியாக சீர்மையை நாடியதில் அதிசயம் ஏதும் இல்லை.

ஆனால் பொருளாதார மலர்ச்சி ஏற்படத் துவங்கிய அதே நேரம், அமெரிக்கப் பண்பாட்டில் ஓரளவு நன்மைக்கான மாறுதல்கள் துவங்கின. குறிப்பாக, வெள்ளை இனவெறி என்பது மோசமான ஒரு மனநோய் என்ற கருத்து கணிசமான அமெரிக்கருக்குப் புரியத் தொடங்கி இருந்தது. அதனாலேயே ஒரு புறம் மார்ட்டின் லூதர் கிங் என்ற கறுப்பின அமெரிக்கரின் இயக்கம் வலுத்தது, சம உரிமைகளைக் கறுப்பருக்கும் கோரி நடத்திய அவரது அமைதிப் போராட்டம் அமெரிக்கரின் மனச்சாட்சியை நன்னிலைக்கு இழுத்தது.

அவரை வெள்ளை இன வெறியர் ஒருவர் கொன்றாலும், அந்த மக்களுரிமை இயக்கத்திற்குப் பணிந்து அமெரிக்க அரசு இனவெறியை ஒதுக்கவும், எல்லா இனத்தவருக்கும் குடிமக்களாயின் சம உரிமை தரப்பட வேண்டுமென்ற மிகச் சாதாரணமான ஜனநாயகக் கருத்தை ஒரு சட்டமாக இயற்றவும் முன்வந்தது.

அந்தக் கால கட்டத்திலிருந்து இன்று வரையிலும் அமெரிக்க சமுதாயத்தின் இன உறவுகள் படிப்படியாக முன்னேறுகின்றன ஆனால் போக வேண்டிய தூரம் எத்தனையோ. சூழ்ந்திருக்கும் இருளோ ஆழமாகவே இன்னும் இருக்கிறது. நாட்டின் விவசாயத்தையும், கனிமப்பொருட்களை அகழ்ந்தெடுப்பதையும் மையத் தொழிலாகக் கொண்டுள்ள பகுதிகளில் மடியாமல் இன்னும் வேரில் உயிர்ப்போடு இருக்கும் வெள்ளை இன வெறி என்பது கடந்த சில பத்தாண்டுகளாக, கிறிஸ்தவ எவாஞ்சலிய முகமூடியை அணிந்து கொண்டு அமெரிக்க அரசியலரங்கில் ஆரவாரத்தோடு எழுந்து நடமிடுகிறது. பாதிக்கு மேற்பட்ட அரசு அங்கங்களை இந்த அற்பக் கருத்தியல் தன் பிடியில் கொண்டிருக்கிறது. (நம் நாட்டில் எழுந்து நடமிடும் திரிபடைந்த பௌத்த கருத்தியலை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளலாம்).

இந்த நேரத்தில், சமீபத்தில் வெளிவந்த ஒரு கருத்துக் கணிப்பு கவனத்துக்குரியது. அமெரிக்கர்கள் மிகச் சமீபத்தில்தான் பல மாநிலங்களிலும் தற்பாலுறவு சார்ந்த திருமணங்களைச் சட்ட பூர்வமாகச் செய்து கொள்ளலாம் என்று ஏற்கத் தொடங்கி இருக்கிறார்கள். கலப்பினத் திருமணங்கள் சட்ட பூர்வமாகச் செல்லும் என்று ஏற்கனவே ஆகிய பிறகு, இந்த அடுத்த கட்டத்து நகர்வு ஒரு முன்னெடுப்பு என்று சொல்லலாம்.

ஆனால் இந்தக் கருத்துக் கணிப்பு சொல்வதைக் கவனித்தால் அமெரிக்காவின் சமூகப் பிரக்ஞை எத்தனைக்குக் கோணல் மாணலாகவே முன்னேறுகிறது என்று நமக்குப் புரியலாம்.


இக்கருத்துக் கணிப்பின்படி அமெரிக்கர்கள் பல வகை மனிதர்களைத் திருமணத்தின் மூலம் தம் குடும்பத்துப் புது நுழைவாக ஏற்பார்களாம், ஆனால் நாத்திகர்களை ஏற்க மாட்டார்களாம்.

அப்படித்தான் கிறிஸ்தவ மதப்பழக்கங்கள் ஆழமாக வேரூன்றிய நாடா இது என்றால் அதுவும் இல்லை. தேவாலயங்களில் வாராந்தரப் பிரார்த்தனைக்கு வரும் மக்கள் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. நாடெங்கிலும் நிறைய கதோலிக்க தேவாலயங்களின் கட்டடங்கள் விற்கப்பட்டு வருகின்றன. பல எவாஞ்சலியக் கிறிஸ்தவக் கூடங்களும், தொலைக்காட்சி சபைகளும் வியாபாரங்களைப் போலத் தோல்வியுற்று மூடப்பட்டு வருவதாகவும் செய்திகள் வருகின்றன. ஆனாலும் நாத்திகர்களை மட்டும் விலக்க அமெரிக்கர் எண்ணுவது ஏன்?

அது வெறுப்பால் என்று சொல்ல முடியாது, அறியாமையால் என்றுதான் சொல்ல முடியும் என்று எழுதுகிறார் ஒரு கட்டுரையாளர். இந்தக் கருத்துக் கணிப்புதான் சமூக எதார்த்தம் என்று நாம் கருதத் தேவையில்லை, ஆனால் அதே நேரம் பாதிக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் இன்னும் விவிலிய நூல்தான் அறிவியலை விட மேலான அறிவுள்ளது, கூடுதலாக நம்பகமானது என்று கருதுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும்.

இந்தக் கட்டுரை சுட்டுவதன்படி சராசரியாக 40 வீதம் அமெரிக்கர்கள் நாத்திகர்களைத் தம் குடும்பத்து உறவினர்களாக நுழைய அனுமதிக்க விரும்பாதவர்கள் என்று தெரிகிறது.

(நன்றி: மகரந்தம்)




# நிலவொளி எனும் ரகசிய துணை

உங்களுக்கு இன்மையை உணரும் அனுபவம் ஏற்பட்டிருக்கிறதா? இயற்கையின் பிரும்மாண்டத்தின் முன் நிற்கையில் அனுபவமாவது அது. நதி சுழித்தோடுவதை பார்க்கும்போது, மலையை வானில் விமானத்தில் பறந்தவாறு பார்க்கும்போது, மொட்டைமாடியில் படுத்துக்கொண்டு கோடை வானத்தைப் பார்க்கும்போது, கடற்கரையில் நின்றவாறு கடலின் விளிம்பு அடிவானத்தில் கோட்டினைத் தொடுவதை தரிசிக்கும்போது - என இயற்கை பிரம்மாண்ட உருக் கொள்ளும் இடங்கள் தோறும் மனிதன் இந்த பிரபஞ்சத்தில் எத்தனை சிறிய துளி என்ற நினைப்பு ஏற்படுமே அந்த நினைப்பினை ஒட்டி ஏற்படுகிற அனுபவமே நான் சொல்ல வருவது.

இயற்கையின் பிரம்மாண்டத்தை, எல்லையின்மையினை உணரும் ஒவ்வொரு கணமும் தனிமையுணர்வும் விடுதலையுணர்வும் சேர்ந்து ஏற்படுவதை நான் பல முறை கவனித்திருக்கிறேன். அந்த அனுபவத்தினை இன்மையை உணர்தல் என்று பெயரிட விரும்புகிறேன்.

இன்மை என்பது வெறுமை அல்ல; அது புத்தனின் புன்னகை போல ஆசையோ துக்கமோ மகிழ்ச்சியோ இல்லாத சாந்தம். அனைத்தும் இயக்கத்தில் இருக்கின்றன; அனைத்துமே இயக்கமற்றும் இருக்கின்றன என அறிவது. இன்மையின் இருப்பு என்று எழுதுவது முரண்பாடு என்றாலும் அதுதான் சரியான விவரிப்பு.

உண்மையில் இன்மையின் இருப்பினை (sensing the presence of emptiness) உணரும் தருணங்களை நீட்ஷேயும் பௌத்த கவிகளும் மட்டுமேதான் அதிகமும் எழுதி யிருக்கிறார்கள். நீட்ஷேயும் பௌத்த கவிகளுமே இன்மையை உணரும் கணத்தில் துணை நிற்பது நிலவொளியே என்று எழுதியிருப்பதும் இன்னொரு ஆச்சரியகரமான ஒற்றுமையாகும்.

நீட்ஷேயின் தத்துவத்திலும் அதையொட்டி எழுந்த பின் நவீனத்துவ சிந்தனையிலும் இன்மையினை அறிந்தபின் உள்ள தருணங்கள் அதிகாரத்தினால் மட்டுமே நிரம்பியவை; அதிகாரங்களினால் ஆன வாழ்வியல் தருணங்களில் நன்மைக்கும் தீமைக்கும் அப்பால் செல்வதே சிறப்பானதாக இருக்க முடியும். அதை நோக்கியே மனித யத்தனங்கள் இருக்க வேண்டும். அதாவது ஆதி மனிதனாக உருவெடுப்பது மட்டுமே இன்மையினை நுணுக்கமாக அறிந்தவர்களின் அடுத்த கட்ட செயல்பாடாக இருக்க முடியும் என்பது மேற்கத்திய சிந்தனையின் வாதமாக இருக்கிறது.

பௌத்த முடிவுகளான காருண்யமும் அன்பும் என்ற இன்மைக்கு அப்பாலான கவித்துவ தருணங்களை வந்தடைவதற்கு மேற்கத்திய சிந்தனையில் இடமில்லை.

இந்த கீழைத் தேய வித்தியாசத்தினையே யாசுனேரி காவபட்டா தன்னுடைய 1968ஆம் ஆண்டிற்கான இலக்கியத்திற்கான நோபெல் பரிசு ஏற்புரையினில் குறிப்பிட்டார். "Japan, the beautiful and Myself" என்று தலைப்பிட்டிருந்தாலும் அந்த உரை முழுக்க ஜப்பானிய இலக்கியத்தில் சந்திரனும் பனியும் எத்தனை ஆழமான குறியீடுகளாய் இருக்கின்றன என்பதை பற்றியதாகவே இருந்தது.

நிலவொளியின் சுத்தப் பிரகாசம் ஜப்பானிய மற்றும் கொரிய இலக்கிய மரபுகளிலும் பௌத்த கவிதையியலிலும் உச்சபட்ச ஞானத்தின் குறியீடாகக் கருதப்படுகிறது.

பாலியல் மீறல்கள், அதீதங்கள் ஆகியன அடங்கிய தொனியில் சொல்லப்படும் காவபட்டாவின் நாவல்களில் - "ஓராயிரம் நாரைகள்" "தூங்கும் அழகிகளின் இல்லம்" "அழகும் துக்கமும்" ஆகிய நாவல்களில் - பிரபஞ்ச இன்மையினை உணர்ந்து அனுபவிப்பதற்கு நிகரான அனுபவங்கள் வாசக அனுபவங்களாகின்றன. காவபட்டாவின் மேதைமை அந்த இன்மை அனுபவத்தினை தன் நாவல்கள் உருவாக்குகின்றன என்பதினை ஒரு படைப்பாளியாக அறிந்து வைத்திருந்ததும், அதைக் கீழைத் தேய மரபில் இடம் சுட்டி விளக்கியதும், மேற்கத்திய சூனியவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டியதிலும் அழகு கொள்கிறது என்று சொல்லலாம்.

காவபட்டா ஜப்பானிய மரபு எனக் கொண்டாடும் பௌத்த மரபு கொரியாவுக்கும் சொந்தமானது. கொரிய பௌத்த குருக்களுள் ஒருவரான பான்ஷான் உருவாக்கிய நிலவு-மனம் என்ற பௌத்த சூத்திரம் கொரிய கவி மரபில் மிகவும் புகழ் பெற்றது. இன்மையை உணரும் மனம் நிலவொளியைத் துணையாகக் கொள்ளும்போது ஞானத்தின் பிரகாசத்தை நிலவொளி எப்படி ஒத்திருக்கிறது என்று பான்ஷான் விளக்கியது காருண்யத்தின் பிரகாசம் நிலவொளியே என்பதை கொரிய பௌத்த மரபில் நிலை நிறுத்தியது.

பான்ஷான் பௌத்த மாணவர்கள் கூடிய சபையில் இவ்வாறாகப் பேசினார்:

"எல்லா வகைகளிலும் நிலவொளி முழுமையானது அது ஆயிரக்கணக்கான திட்டங்களை விழுங்கிவிடுகிறது. நிலவின் பிரகாசம் பொருட்களை ஒளியூட்டுவ தில்லை; பொருட்களின் இருப்பும் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனால் பொருட்களும் பிரகாசமும் தொலைந்தும் விடுவதில்லை. அந்த பிரகாசம் என்னவாக இருக்க முடியும்?"

பான்ஷானின் பேச்சு நிலவொளியை தன்னறிவின் ஞானமாகவும் கொரிய பௌத்த இலக்கியங்களில் விளக்கமளிக்கப்பட்டது.

பௌத்த மதச் சடங்குகளில் முழு நிலவைக் கொண்டாடுதல் என்பது முக்கியமான சடங்காக கிழக்காசியா முழுக்க பரவலாக்கம் பெற்றுவிட்டது. பௌத்த சடங்குகளில் ஒவ்வொரு மாத பௌர்ணமிக்கும் குறியீட்டு அர்த்தங்கள் வழங்கப்பட்டன. ஒரு பௌர்ணமியிலிருந்து மறு பௌர்ணமிக்கு நகர்வது என்பது தன்னறிவின் முழுமையை நோக்கிய நகர்தலாக பௌத்த மரபில் நிலைபெற்றுவிட்டது.



நம் தத்துவத்திலும் கலையிலும் முக்கிய குறி யீடாக வந்திருக்கும் நிலவின் திதிகளும் ஒளிர்வும் பழக்க வழக்கங்களிலும் ஜோதிடத்திலும் மறைந்திருக்கின்றன. கவிதையிலும் வெகுஜன பண்பாட்டுத்தளத்திலும் நிலவும் அதன் ஒளிர்வும் தேய்வழக்குகளாகி இருக்கின்றன.

நிலவொளி என்று மட்டுமில்லாமல் இயற்கையின் அம்சங்கள் எல்லாவற்றோடும் தனியாக அந்தரங்கமாக உறவு ஏற்படுத்திக்கொள்வதற்கான தத்துவங்களும் கலைகளும் நமக்குத் தேவை.


- எம்.டி.முத்துக்குமாரசாமி -





## அறிவியல் அதிசயங்கள் - எழுத்தில்

- ஒரு நிமிடத்திற்கு 15 இலட்ச சிவப்பு இரத்த அணுககள் இறக்கின்றன.
- பூமி தோட்டா செல்லும் வேகத்தை விட 8 மடங்கு வேகத்தில் பயணிக்கிறது.
- உலகில் முதல் முதலில் துப்பறியும் நாயை பயன்படுத்திய நாடு பிரான்சு.
- சாதாரணமாக ஒரு மனிதன் ஓர் ஆண்டில் 5 கிலோ உப்பை உட்கொள்கிறான்...!
- எறும்புகள் பார்மிக் அமிலத்தை காற்றில் கலக்குமாறு செய்து பகை பற்றி எச்சரிக்கின்றன.....
- அறிஞர்கள் சாக்ரட்டீஸும் ஹோமரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்...
- உலகின் மிகவும் பிசியான விமான நிலையம் சிகாகோ நகரில் உள்ள "ஒஹரே" விமான நிலையம் தான்.
- நம் உடலில் 7,000,000,000,000,000, 000,000,000,000 அணுக்கள் உள்ளன.
- ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பு நிறத்தில் முட்டையிடும்..
- தோமஸ் அல்வா எடிசன் பாடசாலைக்குச் சென்றது 3 மாதங்கள் தான் அவருக்கு இருட்டு என்றால் பயமாம்..
- வால்ட் டிஸ்னிக்கு எலியைக் கண்டால் பயமாம்.

## வரைந்து பழகுவோம்




## மூன்று தவறுகள்



இந்தப் படத்தில் மூன்று தவறுகள் இருக்கின்றன? அவை என்னவென்று உங்களால் கண்டு கொள்ள முடிகிறதா? பாருங்கள்!

## கதைகேட்டு கணக்குப் போடு




யாழினியும் சுமதியும் தோழிகள். கோடை விடுமுறைக்குப் பின் பள்ளியில் சந்தித்த இருவரும் தங்களது விடுமுறை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அப்போது யாழினி, தான் விடுமுறைக்கு மாமா ஊருக்குச் சென்றபோது மாமாவின் மகள் தேன்மொழி தனக்கு ஒரு புதிர்க் கணக்கினைப் போட்டதாகவும் தான் அதற்கு சிரமப்பட்டு விடை கண்டுபிடித்துக் கூறியதாகவும் கூறினாள். இதனைக் கேட்ட சுமதி, அதென்ன புதிர்க்கணக்கு? நீ சிரமப்பட்டு விடை கண்டு பிடித்ததை நான் எளிதில் விடை கண்டுபிடித்துக் கூறுகிறேன், கணக்கினைச் சொல் என்றாள். உடனே யாழினி, ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களைப் பயன்படுத்திய கணக்கு, பூஜ்யம் கிடையாது ஒன்று என்ற எண்ணை 3 முறையும் மற்ற எண்கள் ஒவ்வொன்றையும் 2 முறையும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். கூட்டினால் 111 கோடியே 11 இலட்சத்து 11 ஆயிரத்து 111 வரும். (111,11,11,111). முடிந்தால் கண்டுபிடி என்றதும், சுமதி மின்னல் வேகத்தில் கணக்குப் போட்டு விடையினைக் காட்டினாள்.

நீங்களும் கண்டுபிடித்துவிட்டீர்களா?

| | | |
|---|---|---|
| *விடை* | *12,34,56,789* | *99,88,77,665* |
| | *98,76,54,322* | *11,22,33,446* |
| | *111,11,11,111* | *111,11,11,111* |


## துண்டிக்கப்பட்ட கால் இவ்வாறு வளர்கின்றதாம்





மூன்று குலை போட்டது ஓர் வாழை

மூன்று கால் கோழி







## விடுகதைகள்

1. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?
2. காய்ந்த மரத்தில் கல் எடுத்துப் போட்டால் காவற்காரப் பையன் கோபத்திற்கு வருவான். அவன் யார்?
3. முகம் இருக்கிறது, கைகள் இருக்கிறது. கால்கள் இல்லை. நடக்கிறேன். நான் யார்?-
4. சின்னச் சின்னக் கதவுகள், தச்சன் செய்யாக் கதவுகள், கதவடைக்கும், சத்தம் கேட்காது. அவை என்ன?
5. ஒரு சாண் மனிதனுக்கு உடம்பெல்லாம் பற்கள். அவன் யார்?
6. சமைக்க முடியாத மீன்கூட்டம் எட்டாத உயரத்தில். அது என்ன?
7. இவனைப் புரட்டப் புரட்ட புதுப் புது அர்த்தங்களை உணர்த்திடுவான். அவன் யார்-?
8. ஆயிரம் கதைகள் எழுதுவான், அகிலத்தை ஆட்டி வைப்பான், நாக்கு வறண்டால் வீழ்ந்திடுவான். அவன் யார்?
9. சாத்திய கதவிருக்க, ஏற்றிய விளக்கிருக்க, இரவில் வந்தது யார்? இரத்தத்தைக் குடித்தது யார்?
10. செடிக்குக் கீழ்வரும் கிழங்கு, செழுமையாக இருக்கும், பெண்மைக்கு இது பெருமை. அது என்ன?

## கண்டுபிடியுங்கள்




எந்த கை விரல்

இந்த இரண்டு கை விரல்களில் இந்த இணைகர வடிவத்தின் சரிபாதியைத் தொட்டுக் கொண்டிருப்பது எந்தக் கை விரல்?

*விடை- இரண்டும் சமன்*

# யூனியன் கல்லூரிக்கென புதிய கட்டடம்
# அனுமதி வழங்க அமைச்சர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கென புதிதாக நிர்மாணிப்பதாக ஏற்கனவே திட்டமிடப்பட்டு தடைப்பட்டிருந்த கட்டடத் தொகுதியை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறை சார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி சமூகத்தினருடன் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 200 ஆவது ஆண்டை நோக்கிப் பயணிக்கும் நிலையில் விழாவிற்கான விசேட ஏற்பாட்டு திட்டங்கள் முத்திரையை வெளியிடுவது தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது.

இதனிடையே கல்லூரியின் லண்டன் கொழும்பு யாழ்ப்பாணம பழைய மாணவர் சங்கங்களினது பிரதிநிதிகள் ஒன்றிணைந்த நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்படுவதாகத் தீர்மானிக்கப்பட்ட புதிய இரண்டு மாடி கட்டடத் தொகுதியைக் கட்டுவதற்கு அனுமதி பெறப்படவில்லை. இந்நிலையினை அமைச்சரிடம் சுட்டிக்காட்டிய போது மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு புதிய கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கான அனுமதியை வழங்குமாறு அமைச்சரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் நேர்மையான, நியாயமான நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் ஊடான அரசியல் வழிமுறையையே நாம் நீண்டகால பின்பற்றி அதேவேளை, அதனூடாக பல்வேறுபட்ட செயற்றிட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம்.

அந்தவகையில் தான் மக்கள் சரியான பக்கம் அணிதிரண்டு அதற்கு வலுச்சேர்க்கும் போது இதுபோன்ற மேலும் பல அபிவிருத்திசெயற்றிட்டங்களை எம்மால் முன்னெடுக்க முடியும் என்பதை திட்டவட்டமாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றார்.

இதன்போது கல்லூரி அதிபர் இரட்ணகுமார், லண்டன் பழைய மாணவர் சங்கத்தலைவர் தயாளன், கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் செல்வி நளாயினி வைத்தியலிங்கம் ஆகியோருடன் கல்லூரி சமூகப் பிரதிநிதிகளுடன் அமைச்சரின் ஆலோசகர் சுந்தரம் டிவகலால ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அமரர் பத்தினியம்மாவின் நினைவாக ஆய்வுநூல்வெளியீடும் நினைவுரைகளும்

ஓய்வு பெற்ற வலி. வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலரும் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமாகிய அமரர் பத்தினியம்மா திலகநாயகம் போலின் நினைவாக பத்தினியம்மா நிதியமும் வலி.வடக்கு கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண்கலைஞர்கள் ஆய்வு நூல் வெளியீடும நினைவுரைகளும் வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பத்தினியம்மா நிதியத்தின் தலைவர் ப.இராஜகோபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையினை உடுவில் பிரதேச செயலக பிரதி திட்டமிடற்பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் அறிமுக உரையினை யாழ்ப்பாணப பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், வெளியீட்டுரையினை கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம பொறியிலாளர் எந்திரி ஆர்.சுரேஸ்குமார், ஆய்வுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், பதிலுரையினை நூலாசிரியர் கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளார்கள்.

நினைவுரைகளினை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பத்தினியம்மாவின் நிர்வாக ஆளுமைகள் என்னும் விடயத்திலும் நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், பிரதேசசெயலகங்கள் 'கண்டு கொண்ட பத்தினியம்மா' என்னும விடயத்திலும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், ஆன்மீகத்தில் பத்தினியம்மா என்னும் விடயத்திலும் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜரத்தினம், பண்பாடும் கலைவளர்ச்சியும் என்னும் விடயத்திலும் வலி.வடக்கு கலாசார பேரவையின் உபதலைவரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான குழுவின் செயலாளருமாகிய சு.பத்மநாதன் சமூக சேவையில் பத்தினியம்மா என்னும் விடயத்திலும் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் உளவளத்துணையாளர் திருமதி கோகிலா மகேந்திரன் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றமும் பத்தினியம்மாவும் எனனும் விடயத்திலும் ஓய்வு பெற்ற மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஜே.எப்.ஏ.ரூபசிங்கம், விளையாட்டுத்துறையில் பத்தினியம்மா என்னும் விடயத்திலும் ஓய்வு நிலை கிராம அலுவலர் பொ.இராஜேந்திரம் கிராம அலுவலர்களுடன் பத்தினியம்மா என்னும் விடயத்தில் நினைவுப் பேருரைகளினை நிகழ்த்தவுள்ளார்கள். (63)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங் கார உற்சவம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இவ் உற்சவத்தில் தினமும் பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்னும் விடயம் பற்றி யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.குமரன் சொற்பொழிவாற்றி வருகின்றார். (63)



கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் அதிபராக மீளவும் நியமிக்கப்பட்ட திருமதி சந்திரசேகரம் நவமணி அண்மையில் பதவியேற்றபோது பாடசாலைச் சமூகத்தினரால் அவர் வரவேற்கப்படுவதைக் காணலாம். (18)

# பதிவிறக்கப் பெட்டகம்

பெரும்பாலும் திரைப்படங்களின் டைட்டில்களே அத்திரைப்படத்தின் உள்ளடக்கத்தை சொல்லி விடும். அப்படித்தான் அவை அமைக்கப்பட வேண்டும். காமெடியா, திரில்லரா, சஸ்பென்ஸா, ரொமாண்டிக்கா.. என்று பார்வையாளர்களை தயார்ப்படுத்துவதற்கு டைட்டில் காட்சிகள் அமைக்கப்படும் தன்மைக்கு பிரதான பங்குண்டு. டைட்டில் கார்ட்களின் போதே அதன் பின்னணியில் காட்சிகளை துவக்கிச் செல்லும் அவசரக் குடுக்கைகளான இயக்குநர்கள் உண்டு. இது எனக்குப் பொதுவாக பிடிக்காது. காட்சியை கவனிப்பதா, நுட்ப கலைஞர்களின் பெயர்களை கவனிப்பதா என்று குழப்பமாக இருக்கும். சுமார் இரண்டரை மணி நேர திரைப படத்தை உருவாக்க பெருமளவு உழைத்திருக்கும் நபர்களின் பெயர்கள் இரண்டரை விநாடிகளுக்கு மேல் கூட இருக்காது எனும் போது அதையும் கவனிக்க விடாமல் செய்வது அவர்களின் உழைப்பிற்கு செய்யும் அநியாயம். மிருதுவான இசையில் அல்லது இசையே அல்லாமல் கறுப்பு நிற பின்னணியில் வெளிப்படும் டைட்டில் கார்ட்களே எனக்கு பொதுவாக பிடித்தமானது. இப்போதெல்லாம் டைட்டில்களில் வரும் சிறப்பான அனிமேஷன் காட்சிகளுக்காகவே ஒரு குழு உழைக்கிறது.

விருது வாங்குவதற்கென்றே எடுக்கப்படும் திரைப்படங்களின் டைட்டில்கள் அதற்கான சாவகாசத்துடனும் அழகியல் உணர்வுகளுடனும் துவங்கும் போதே 'இதோ ஒரு மிகச் சிறந்த திரைப்படத்தைப் பார்க்கப் போகிறோம்' என்று தோன்றுகிற நிறைவான உணர்வு படம் முடியும் போது மிச்சமிருக்குமா என்பதற்கு உத்தரவாதமில்லை.

அப்படித்தான், சமீபத்தில் குறியீட்டுக் காட்சிகளுக்காகவே புகழ்பெற்ற ஒரு திரைப்பட இயக்குநரின் படத்தைப் பார்க்கத் துவங்கினேன். கறுப்பு நிற பின்னணியில் மெலிதான ஸெலோவின் இசையுடன் பெயர்கள் தோன்றி சில நீண்ட விநாடிகள் கழித்து கொட்டாவியான இடைவெளியுடன் அடுத்தடுத்த பெயர்கள் வந்து கொண்டிருந்தன. இரண்டிற்குமா இடையில் திரை இருளாகவே இருக்கும். அத்திரைப்படம் கண்பார்வையற்ற நபர்கள் பிரதானமாக நடித்திருந்த திரைக்கதையுடன் கூடியது என்பதை முன்பே அறிந்திருந்ததால் அந்த பாணி டைட்டில் அதற்கு பொருத்தமாகவே இருந்தை உணர்ந்தேன். இயக்குநரின் பெயர் வந்தபிறகும் சில விநாடிகளுக்கு திரை இருளாகவே இருந்தது.

விநாடிகள் நிமிடங்களுக்கு நகர்ந்தன. அப்போதும் திரை இருளாகவே இருந்தது. 'இதோ ஒரு பார்வையற்ற நபர் தூக்கத்திலிருந்து எழுந்து அறையிலிருந்த விளக்கைப் போடப் போகிறார்' என்கிற மாதிரியான காட்சி வரப்போகிறது என்கிற எதிர்பார்ப்புடன் நானும் காத்திருந்தேன்.

சில நிமிடங்களுக்கு பின்னரும் திரை இருளாகவே இருந்தது. பொதுவாக இம்மாதிரி ஆமை வேகத்தில் நகரும் சாவகாச திரைப்படங்களை நிதானமாக பார்க்கும் அனுபவம் எனக்கு ஏராளம் என்பதால் அப்படியொன்றும் பரபரப்பில்லாமல் காத்திருந்தேன். பார்வையற்ற நபர்களின் உலகத்தின் இருண்மையை, தனிமையை இயக்குநர் நமக்கு உணர்த்த விரும்புகிறார் போலிருக்கிறது என்று தோன்றிக் கொண்டிருந்தது.

சில நிமிடங்கள் கழிந்தும் கூட திரை இருளாகவே இருந்தது. 'இது என்னடா... ஓவர் குறியீடாக இருக்கிறதே' என்று எழுந்து சென்று பார்த்தேன்.

மின்சாரம் நின்று போய் சில நிமிடங்கள் ஆகியிருந்தது.

– சுரேஷ் கண்ணன்

மூளையின் காரணகாரிய மடிப்புகளைத் தூங்க விட்டு விட்டு, கண்களையும் காதுகளையும் மட்டும் திறந்து வைத்துக்கொண்டு பார்த்தால் தமிழ்ப்படமும் ஒரு சுகானுபவம் தரவே செய்கிறது. – அசோகமித்திரன்

நான் ஓர் ஆழமான கதையை வடிவமைத்தேன். ஆனால், நான் சந்தித்த ஒரு தய[illegible]பாளரும் அதை ஏற்கத் தயாராக இல்லை. மக்கள் விரும்பும் ஒரு ஆன்டி ஹீரோ கதாபாத்திரம் அமையுங்கள் படம் பண்ணலாம் என்று தயாரிப்பாளர் கூறினார். அந்த கோபத்தில் அமைத்த கதை தான் 'ஜென்டில்மேன்'.

ஜென்டில்மேன் கொடுத்த கமர்ஷியல் வெற்றி 'ஷங்கர் என்றால் பிரம்மாண்டம்' என்ற பிம்பத்தை அளித்தது. நான் முதலில் நினைத்த யதார்த்தம் தழுவிய அழுத்தமான சினிமாவை என்னால் அளிக்கவே முடியாமல் போனது.

– ஷங்கர்

அதிபர்களின் பொறுப்பற்ற செயற்பாடு

# க.பொ.த.சா/த மாணவர்களுக்கு அடையாள அட்டை பெறுவதில் சிக்கல்

(கொழும்பு)
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல விண்ணப்பங்கள் உரிய முறையில் பூரணப்படுத்தப்படவில்லை என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உரிய முறையில் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மீண்டும் விண்ணப்பதாரர்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் என ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத் குமார தெரிவித்தார்.

இதனால் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதில் கால தாமதம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்ணப்பத்திற்கு தேவையான முத்திரை ஒட்டப்படாமலும், அதிபர், மாணவர்களின் கையொப்பம் இன்றியும் சில விண்ணப்பங்களில் திருத்தமான கையெழுத்து இன்றியும் அனுப்பி வைக்கப்படுவதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் உரிய அளவிலான புகைப்படம் இன்றியும், பிறப்புச் சான்றிதழ் உறுதிப்படுத்தப்படாமலும், விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் அவற்றை பரிசோதித்து அனுப்பி வைக்குமாறும் வலயக் கல்விப் பணிமனைகள் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் ஆட்பதிவு ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சுமார் இரண்டு இலட்சம் விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டியுள்ளபோதிலும் இது வரை அவை கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாழடைந்த பஸ்தரிப்பிடத்தை புனரமைக்குமாறு கோரிக்கை



(மன்னார்)
ஏ-32 பிரதான வீதியில், விடத்தல்தீவு பொது வைத்தியசாலைக்கு அண்மையில் பள்ளமடுப்பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் நெடுநாட்களாகப் புனரமைக்கப்படாமல் பாழடைந்துள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பள்ளமடுவிலிருந்து ஏ-32 பிரதான வீதியூடாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் செல்லும் பயணிகள் இந்தத் தரிப்பிடத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

தரிப்பிடக் கட்டடம் பராமரிப்பின்றி சுவர்கள் வெடித்துக் காணப்படுவதோடு அழுக்குகள் நிறைந்தும் காணப்படுகிறது. தமது பயன்பாட்டுக்குத் தக்கவகையில் தரிப்பிடத்தைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர்.

# சுற்றுலாப்பயணிகளுக்கு 10 நிமிடத்தில் "லைசன்ஸ்"

(கொழும்பு)
வெளிநாட்டில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களது நாட்டின் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருந்தால், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பத்து நிமிட நேரத்தில், இலகுரக வாகனங்களுக்கான மூன்று மாத காலத்துக்குச் செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஏற்பாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் நடைமுறைக்கு வருவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் எஸ்.எம். ஹரிச்சந்திரா தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் உல்லாசப்பயணிகள் விமான நிலையத்திலேயே சட்டரீதியான சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு, அங்கிருந்தே ஒரு காரை வாடகைக்கு அமர்த்தியபடி, தானே அதனைச் செலுத்திக் கொண்டு செல்லமுடியும். இந்தத் திட்டத்துக்கு திறைசேரியும் அனுமதி வழங்கியுள்ளது. மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குகின்றமை குறித்தும் ஆராயப்படுகின்றது. வெளிநாட்டு சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் அந்நாட்டவர்களுக்கு இலங்கையில் வாகனம் செலுத்துவதற்கான அனுமதி வழங்கும் நடைமுறை தற்போதும் நடைமுறையில் உள்ளது.

தற்சமயம் அதற்கு அவர்கள் வெரஹெரவில் உள்ள அலுவலகத்துக்குப் போய் ஒருநாள் காத்திருக்க வேண்டும். அது குறித்து பல தரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் செய்யப்பட்டமையை அடுத்தே புதிய ஏற்பாடு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட இருப்பதாகக் கூறப்பட்டது.

# ஞானசார தேரரை கைது செய்யாத பொலிஸ்மா அதிபர் பதவி விலக வேண்டும்

## வலியுறுத்துகிறது நேசன்

(கொழும்பு)
வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்பட்டதாக குற்றஞ்சாட்டி அசாத் சாலியை கைது செய்ய முடியுமானால் ஏன் அதே தவறை செய்த கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்ய முடியாது என்று ஆங்கில செய்தித்தாளான நேசன் தனது தலையங்கத்தில் கேள்வியெழுப்பியுள்ளது. இன்று நாட்டின் இறைமையை குறிவைத்து வன்முறைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இதற்கு தார்மீக பொறுப்பேற்று பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் பதவி விலக வேண்டும். அளுத்கமயில் பொதுபலசேனா பேரணி நடாத்திய பின்னரே முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடித்தன. முன்னதாக பௌத்த பிக்கு ஒருவர் முஸ்லிம் ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை கண்டித்தே இந்தப்பேரணி நடாத்தப்பட்டது.

எனினும் பௌத்த பிக்கு தாக்கப்படவில்லை என்று வைத்திய அறிக்கைகள் உறுதிப்படுத்தின. இருந்தபோதும் முந்திக் கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்த பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன், குறித்த பௌத்த பிக்கு தாக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். இது பொறுப்பற்ற தமது பதவிக்கு அப்பாற்பட்ட குற்றமாகும் எனவே இலங்கக்கோன் பதவியை விட்டு விலகவேண்டும். இதே வேளை அளுத்கமவில் பொதுபலசேனா பேரணி நடாத்திய போது அதற்கு விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

இதற்கு காரணத்தை கேட்ட போது அமைதியான பேரணி ஒன்றுக்கே பாதுகாப்பு வழங்கப்பட்டதாக விசேட அதிரடிப்படையினர் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால், குறித்த பேரணி, முஸ்லிம்களுக்கு எதிரான சுலோகங்களை தாங்கிய பேரணியாக இருந்தது. எனவே அதனை அமைதிப் பேரணி என்று எவ்வாறு கூறமுடியும் வன்முறையைத் தூண்டும் வகையில் அசாத் சாலியை கைதுசெய்ய முடியுமானால் ஏன் அதே தவறை செய்த கலகொட அத்தே ஞான சார தேரரை கைது செய்ய முடியாது.

அதேவேளை அளுத்கம வன்முறைச் சம்பவங்களில் யாரும் கொல்லப்படவில்லை என உண்மைக்குப் புறம்பான தகவல்களை அவ்வப்போது பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ளார். இதேவேளை முஸ்லிம் வர்த்தகருக்கு சொந்தமான நோலிமிட் தீக்கிரையாக்கப்பட்ட போது இலங்கக்கோன் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. எனவே பொறுப்பற்ற செயல்களுக்காக இலங்கக்கோன பதவி விலக வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துரோகம் இழைக்கும் அரசு நீண்டகாலம் நீடித்திருக்காது

## என்கிறது ஐ.தே.க.




(கொழும்பு)
மக்களுக்கு பல்வேறு வழிகளில் துரோகம் இழைத்து வரும் அரசாங்கம் நீண்ட காலம் நீடித்திருக்காது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்குள்ளே பிரச்சினைகள் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது என சிலர் கருதுகின்றனர். இந்தக் கனவு உலகத்தை வெடித்துச் சிதறச் செய்யக் கூடிய காலம் கூடியுள்ளது. பெரும்பான்மையான மக்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை கவிழ்க்க முடியாது என கருதினர். எனினும், ஆளும் கட்சிக்குள் பாரியளவில் பிளவு ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய ஒன்பது அமைச்சர்கள் இருப்பதாக பொதுபல சேனா இயக்கம் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளது. போதைப் பொருள் பிரச்சினை பாரியளவில் உருவாகியுள்ளது. அபிவிருத்தி குறித்து அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்ற போதிலும் மக்களுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் மற்றும் மாகம்புர மகிந்த ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய எரிபொருள் தொகுதிகளையும், எரிபொருள் களஞ்சியங்களையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

# அசம்பாவிதம் குறித்து விசாரிக்க மேலும் 15 பொலிஸ் குழுக்கள் நியமனம்



அளுத்கம, பேருவளை, வெலிப்பன்ன மற்றும் மத்துகம பிரதேசங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணையை செய்வதன் பொருட்டு மேலும் 15 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை விரைவாக சட்டத்தின் முன் கொண்டுவருவதன் பொருட்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

அளுத்கம மற்றும் பேருவளை உள்ளிட்ட பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவதன் பொருட்டு குற்றத்தடுப்பு திணைக்களம் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு உட்பட்ட ஐந்து விசாரணைக் குழுக்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதன் பொருட்டு 20 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் குறிப்பிட்டார்.


சம்பவம் தொடர்பில் இது வரையில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 35 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

23. இக்கூடுகளிலுள்ள இலக்கம் 2களின் கூட்டுத் தொகைக்கு இலக்கம் 3களின் கூட்டுத்தொகை சமனாகவிருந்தால் "தி" உள்ள கூட்டில் Xஐ வரைக. அவ்வாறில்லை எனின் "வ" உள்ள கூட்டில் Xஐ வரைக?


24. 1408 என்ற எண்ணை எழுதக்கூடிய இலக்கங்களை இக்கூடுகளிலிருந்து பெறமுடியுமெனின் "அ" உள்ள கூட்டினுள் X வரைக அவ்வாறில்லை எனின் ஓ உள்ள கூட்டில் Xஐ வரைக?

25. ஒரு தடவை மட்டும் வந்துள்ள இலக்கங்களின் எண்ணிக்கை ஐந்து எனின் "கு" உள்ள கூட்டினுள் Xஐ வரைக. அவ்வாறில்லை எனின் "மை" உள்ள கூட்டினுள் Xஐ வரைக?


26. ஒரு போத்தலின் உடலில் இருக்கும் மூன்று துளைகள் உருவில் காட்டப்பட்டுள்ளது. இப்போத்தல்கள் முழுமையாக நீரினால் நிரப்பப்படும் போது துளைகளினூடாக நீர் வெளியேறும் முறைமை திருத்தமாக காட்டும் உரு எது?





27. ஒரு சதுரக்கண்ணாடிக் குவளையில் நீர் ஊற்றப்பட்டுள்ளது. கண்ணாடிக் குவளையினுள் நீர் நிற்கின்ற சரியான நிலையை காட்டுகின்ற உரு எது?





- **கீழே இரு தராசுகளிலுள்ள மூன்று பொருட்களின் நிறைகளை அவதானியுங்கள் (ஒரே வடிவப் பொருட்கள் சம நிறையுடையவை)**



28. இவற்றுள் மிகவும் பாரம் கூடிய பொருள் எது?




29. இவற்றுள் நிறைகுறைந்த பொருள் எது?




இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



❖ **01 முதல் 03 வரையான வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. காற்று: புயல் எனின் மழை ..............................
   (1) முகில் (2) வெயில் (3) வெள்ளம்

2. ஏறு: இறங்கு போல மலை ..............................
   (1) குன்று (2) மடு (3) கிரி

3. ஆசிரியர்: மாணவர் எனின் பெற்றோர் ..............................
   (1) மகன் (2) பிள்ளை (3) மகள்

❖ **நிரல் Iல் உள்ளவை நிரல் IIல் உள்ளவைக்கும் சமனாயின் '✓' எனவும் சமனில்லையாயின் 'X' என அடையாளமிடுக.**


| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 4. | PRSTPTSR | PRSTPTSR (..................) |
| 5. | இடவிடகமிவக | இடவிடசமிவக (..................) |
| 6. | 9R8P9745 | 9R8P97AS (..................) |

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

7. எனது தந்தையின் மகனின் தாய் எனக்கு என்ன முறை
   (1) மாமி (2) தாய் (3) பெரியம்மா
8. எனது வகுப்பிலுள்ள அநேகமான மாணவர்கள் உயரமானவர்களென முகுந்தன் கூறினான். எனவே முகுந்தன் உயரமானவன் என்பது
   (1) சரி (2) பிழை (3) கூறமுடியாது
9. ஒலிம்பிக் போட்டிகள் எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.
   (1) நான்கு (2) ஆறு (3) பன்னிரண்டு
10. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு
   (1) சுவிஸ் (2) நோர்வே (3) ஜப்பான்
11. ஒரு வருடத்தில் 30 நாட்கள் கொண்ட மாதங்கள் எத்தனை?
   (1) 07 (2) 04 (3) 05



PUBLIC LIBRARY JAFFNA





மேல்வரும் வரைபை அவதானித்து 12 - 14 வரையான வினாக்களிற்கு சரியான விடையின் கீழ் கீறிடுக.

12. மூன்றையும் விரும்புவோர் எத்தனை பேர்? ........................................

13. மீனைவிரும்புவோர் எத்தனை பேர்? ........................................

14. இறைச்சியை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர்? ........................................


- கீழுள்ள வரைபை அவதானித்து15, 16ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்க.




15. தோசையை விரும்புவோர் 15 பேர் எனின் அப்பத்தை விரும்புவோர் எத்தனை பேர்?
(2) 45பேர் (3) 30 பேர்

16. எல்லா உணவுகளையும் விரும்புவோர் எத்தனை பேர்?
(1) 180 பேர் (2) 120 பேர் (3) 150 பேர்


17. மிருகங்கள் . மான், யானை என்பவற்றிற்கான தொடர்பினைக் காட்டுவதற்கு பின்வரும் எந்த உரு பொருத்தமானதாகும்?




(2) (3)




18. நீரில் வாழ்வன, மீன்கள், பிரைமீன்கள் என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை காட்டுவதற்கு பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது இதில் Yஇனால்காட்டப்படுவது யாது?




(1) நீரில் வாழ்வன (2) மீன்கள் (3) பிரைமீன்

❖ உதயனும், மனைவியும், அவனின் தாய், தந்தை, தம்பி, தங்கை, மகன், மகள் ஆகியோருக்கிடையிலேயுள்ள உறவு முறைகளைக் காட்டுவதற்கு பின்வரும் கோட்டுப்படம் வரையப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக கொண்டு 19 - 21 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கீறிடுக.




19. உதயனின் தாய் பின்வரும் எந்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ளார்?
(1) C (2) B (3) A

20. எழுத்து E இலை குறிப்பிடப்படுபவருக்கு உதயனின் மனைவிக்கு இடையிலான தொடர்பு பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கும்?
(1) மாமன் மருமகன் (2) மகள் தாய் (3) மகன், தாய்

21. D என குறிக்கப்பட்டுள்ளது உதயனின் தம்பி எனின் C எனக் குறிக்கப்பட்டுள்ளது யார்?
(1) உதயனின் தங்கை (2) உதயனின் தந்தை (3) உதயனின் மகள்

❖ கீழே தரப்பட்டுள்ள கூடுகளிலுள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் அவதானித்து 22- 25 வரையாக தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 7 | 5 | 8 | ஓ | 3 |
| 9 | ச | 9 | தி | 9 | 5 |
| மை | 6 | கு | 3 | ப | 2 |
| 8 | 9 | 4 | வ | 5 | 1 |
| 7 | அ | 5 | 2 | 7 | 9 |

22. இக்கூடுகளிலுள்ள இலக்கம் 5களின் எண்ணிக்கை இலக்கம் 9களின் எண்ணிக்கைகளை விட கூடியதெனின் "ச" உள்ள கூட்டில் Xஐ வரைக அவ்வாறில்லை எனின் "ப" உள்ள கூட்டில் Xஐ வரைக?

# அடிப்படைவசதிகளற்ற பொதுச்சந்தை விசனத்துக்குள்ளாகும் வர்த்தகர்கள்


முல்லைத்தீவு மந்துவில் பொதுச்சந்தை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு திறந்துவைக்கப் பட்ட நிலையில் இதுவரை அடிப்படைவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் இச்சந் தையில் வர்த்தக நடவடிக் கையை மேற்கொள்ளும் வர்த்த கர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு புதுக்குடியி ருப்பு பிரதேச சபையின் கீழுள்ள மேற்படி சந்தை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த பெப்ரவரி மாதம் திறந்துவைக்கப்பட்டது. எனினும் இச்சந்தையில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

குறிப்பாக இச்சந்தையில் பல்பிரதேசங்களிலிருந்து வியா பாரிகள் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதுடன் நுகர் வோரும் அதிகளவில் இச்சந் தைக்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

இந்நிலையில் குறித்த பொதுச்சந்தையில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலை காணப்படுவதால் வர்த்தகர் களும் நுகர்வோரும் சொல் லனாத் துன்பங்களுக்கு ஆளா குவதாகவும் எனவே பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டமை மகிழ்ச்சி அளிக்கும் அதே வேளை பொதுச்சந்தையில நில வும் குறைபாடுகளையும் தீர்க்க பிரதேசசபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிர தேச மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.

# குடிநீரை பெறுவதற்கு ஏதுவாக கிணற்றினை புனரமைக்க கோரிக்கை




(கரணவாய்)

கரவெட்டி நுணவில் பிள் ளையார் ஆலயத்திற்குச் செல் லும் வயல் வெளியில் அமைந் துள்ள பொதுக்கிணற்றிலிருந்து குடிநீரை பெறுவதற்கு ஏதுவாக அக்கிணற்றினை சீரமைத்து தரு மாறு இப்பிரதேசத்தை அண்டிய மக்கள் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

60 வருடங்களுக்கு முன் தனியார் ஒருவரி னால் பொது மக்களின் நலன்கருதி குடிப்பதற் கும், குளிப்பதற்கும் ஏற் றதான வசதிகளுடன் அமைக்கப்பட்ட நிலையில் தற்போது இக்கிணறு பழு தடைந்த நிலையில பாசி பிடித்து பயன்பாட்டிற்கு, உதவாது காணப்படுவ தாக மக்கள் சுட்டிக்காட்டுகின்ற னர்.

எனினும் ஒருவாறு துப்பரவு செய்யப்பட்டு தற்போது குளிப் பதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்ற நிலையில் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏதுவாக இக் கிணற்றினை சீரமைக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (18)

# வீதியில் கண்டெடுத்த பணத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்த ஆசிரியை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பத்தமேனிப் பகுதியி லுள்ள வீதியில் 23ஆயிரத்து 240 ரூபா மற்றும் வெளிநாட்டு பணத்துடன் கிடந்த கைப்பை யொன்றினை அச்சுவேலியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் நேற்றுமுன்தினம் தம்மிடம் ஒப்ப டைத்ததாக அச்சுவேலி பொலிஸ் நிலைய குற்ற ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் கே.எம்.சி. பிரதீப் செனவிரத்தன தெரிவித் தார்.

அச்சுவேலி பத்தமேனியி னைச் சேர்ந்த மகாதேவன் மரு தாலினி (வயது24) என்பவரே இவ்வாறு கைப்பையை ஒப்ப டைத்துள்ளார்.

மேற்படி கைப்பை அச்சுவேலி இடைக்காட்டுப பகுதியினைச் சேர்ந்த ஒருவரு டையது எனவும் ஆதாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டு உரிமை யாளரிடம் ஒப்படைக்கப்படவுள் ளதாகவும் பரிசோதகர் தெரி வித்தார்.

"ஆசிரியையின் நேர்மை யான செயலினைப் பாராட்டு வதுடன், இவரை முன் மாதிரி யாகக் கொண்டு மற்றவர்களும் செயற்படவேண்டும்" என பரி சோதகர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளநீர் வழிந்தோடும் வகையில் நீர் போக்கு பாதைகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பிரதான வீதியில் வீதி அகலிப்பு பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் வீதி யில் 10 நீர் போக்கு பாதைகள அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்போக்குகள், மதகுகள் சிறியபாலம் ஆகிய அமைப்புக் களைக் கொண்டதாகும். அத் துடன் சம்புக்குள மதகில் இருந்து பண்ணை சந்தி மதகு வரை இந்த 10 மதகுகளும் உள்ளன. மேலும் இவ்வீதியில் ஒரு புதிய நீர் போக்குவழியும் ஏற் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாரி காலத்தில் கடல்நீர் இவ் வீதியை மேவிப் பாய்வதை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இப்போக்குகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகி றது.

இதேவேளை இவ்வீதியுள்ள மதகுகளில் சிறிய மதகுகளின் திருத்தத்தின் பின்பே பெரிய நீர் பாதைகள் திருத்தப்படவுள்ள தாகவும் வீதி ஒப்பந்தகாரர்க ளால் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மண்டைதீவு பிரதான வீதித்திருத்த வேலை கள் மழை காலத்திற்குள் நிறைவடைய வேண்டும் எனவும் இல்லாது விடில் மண்டைதீவு கிராமத்துக்கு கான போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (23)

# பருத்தித்துறை பிரதேசத்தில் ஏழு வீதிகள் புனரமைக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைக் குட்பட்ட 7 வீதிகள் 3கோடி 85 இலட்சம் ரூபா செலவில் செப்ப னிடப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை மேற் கொண்டுள்ளதுடன் திருத்தப் படாத இந்த வீதிகளால் போக் குவரத்தை மேற்கொண்ட மக் கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது இவ்வீதிகள் புனர மைக்கப்படுவதால் போக்கு வரத்து இலகுபடுத்தப்படுவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்ற னர்.

இதன்படி மணல்ஒழுங்கை வக்கமோட்டை ஒழுங்கை, ஆகி யன கொங்கிறீற் வீதிகளாகவும் முனீஸ்வரஆலயவீதி, கடற் கரைவீதி, சந்தைமேற்கு ஒழுங்கை, தாழ்வுகலட்டி ஒழுங்கை, சென். அன்ரனீஸ் வீதி என்பன புனர மைக்கப்படவுள்ளது.

மேலும் அலுவலகத்தில் முன் கொங்கிறீற் பதித்தல் என்பனவும் இடம்பெறவுள்ளது

# மகோற்சவம்

(கரவெட்டி)

கரணவாய் கல்லுவம் ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை மு.ப 11.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் திரு விழாக்கள் நடைபெறவுள் ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி சப்பறத்திருவிழா வும், 3ஆம் திகதி வியாழக் கிழமை தேர் உற்சவமும் ,4ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெற்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும்

# இரு நூல்களின் வெளியீட்டுவிழா

யாழ்பல்கலைக்கழக தமிழ்த் துறையின் ஒழுங்குபடுத்தலில் ஆ.யேசுராசாவின் திரையும் அரங்கும் கலைவெளியில் ஒரு பயணம், சு.ஸ்ரீதரனின் ஸ்ரீதரன் கதைகள் ஆகிய இரு நூல்களின வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை மாலை 3மணிக்கு நடை பெறவுள்ளன.

இந்நிகழ்வு புவியியல்துறை மண்டபத்தில் ஓய்வுபெற்ற பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர்.சோ.பத்மநாதன் தலை மையில் நடைபெறும்

இந் நிகழ்வில் மதிப்பீட்டுரை களில் திரையும் அரங்கும் கலை வெளியில் ஒரு பயணம் நூலின் மதிப்பீட்டுரையை ஆங்கில இரண் டாம் மொழி அலகு போதனாசிரி யர் இ.ராமணன், ஸ்ரீதரன கதைகள் நூலுக்கான மதிப்பீட்டுரையை தமிழ்த்துறை முதுநிலை விரிவு ரையாளர் க.அருந்தாகரன் ஆகி யோர் வழங்கவுள்ளனர்.

# மகாஜனசபை கலைஞர் வட்ட சிறப்புப்பட்டிமன்ற நிகழ்வு

(அலுவெட்டி)

அனலைதீவு மனோன்மணி ஆலய மகோற்சவப் பெருந் திருவிழாவில் அளவெட்டி மகா ஜனசபை கலைஞர் வட்ட பட்டி மன்றக்குழுவின் சிறப்புப்பட்டி மன்ற நிகழ்வு இடம்பெற்றது

பெரிய புராணத்தில், அதிகம் விஞ்சி நிற்பது திருவருட் சிறப்பா? திருக்கூட்டச் சிறப்பா? என்னும் தலைப்பில் இடம்பெற்ற இலக்கியபட்டிமன்றத்திற்கு நடு வராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தி யோகத்தர் எழுத்தாளர். வே.சிவ ராசா செயற்பட்டார்.

பெரியபுராணத்தில் அதிகம் விஞ்சி நிற்பது திருவரு ...ப்பு என்னும் அணியின் தலை ...ப் பேச்சாளராக யாழ்ப்...ணம் மத்தியகல்லூரி ஆசிரியர் சைவப் புலவர்பண்டிதர.எஸ்.ரி குமரன் இணைப்பேச்சாளர்களாக வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.உஷாந்தன், பல்கலைக்கழக மாணவன் சஜீவன் ஆகியோர் வாதாடினர்.

பெரியபுராணத்தில் அதிகம் விஞ்சிநிற்பது திருக்கூட்டச் சிறப்பு என்னும் அணியின தலைமைப் பேச்சாளராக ஊர் காவற்துறை நீதிமன்ற உத்தி யோகத்தர் அருண்மொழிச் செல் வன், இணைப்பேச்சாளராக மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி அருள்குமரன், சட்டத்துறை மாணவன் சி.சிவஸ் கந்தஸ்ரீ ஆகியோர் வாதிட்டார்கள்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்




யாழ். அல்ஹதீஜா முன்பள்ளிச்சிறார்களுக்கு யாழ் பிரதேச செயலகத்தினால் சத்துணவுகள் வழங் கப்பட்ட போது (105)

# ஈராக்கில் ஆக்ரோசமாகும் போர்

## உலகுக்கு சவாலாகும் தீவிரவாதிகள்

ஈராக்கில் ஆக்ரோஷமாகப் போரிட்டு வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் உலகுக்கு சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் விளங்கி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கவலை தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் தீவிரமடைந்து வரும் உள்நாட்டுப் போர் தொடர்பாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த ஒபாமா மேலும் கூறியதாவது:-

ஈராக்கில் போரிட்டு வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகளின் தீவிரவாத சித்தாந்தம் இடைக்கால மற்றும் நீண்டகால அச்சுறுத்தலாக மாறி வருகிறது. அமெரிக்காவுக்கு எதிராக ஏராளமான திட்டங்களுடன் அங்கு பல குழுக்கள் இயங்கி வருகின்றன. இது தொடர்பாக நாம் இடைவிடாத கண்காணிப்புடன் இருக்க வேண்டியுள்ளது.

இதைப் போன்ற இயக்கங்கள் வன்முறையை பிரயோகித்து, தீவிரவாதத்தின் மூலம் ஒரு நாட்டின் எல்லையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் போது, உள்ளூர் மக்கள் அவர்களை புறக்கணித்து விடுகின்றனர். ஈராக் அரசுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சன்னி தீவிரவாத குழுக்களை அந்நாட்டின் மக்களும் புறக்கணிப்பார்கள்.

இதை நாம் ஈராக் போரின் போது அன்பர் மாகாணத்தில் கண்கூடாக பார்த்திருக்கிறோம். அங்குள்ள சன்னி பழங்குடியினர் இவர்களின் தீவிரவாத சித்தாந்தத்தை சகித்துக் கொள்ள முடியாமல், திடீரென்று இவர்களுக்கே எதிராக திரும்பினர். இத்தகைய குழுக்களுக்கு எதிராக அமெரிக்கா எப்போதும் விழிப்புணர்வுடன் இருக்கும்.

தற்போது, ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நிலைகுலைய வைத்து வருவது தான் நமக்கு கவலையளிக்கும் பிரச்சினையாக உள்ளது. சிரியாவில் நடக்கும் போரிலும் பங்கேற்று வரும் இவர்கள் அந்நாட்டில் இருந்து அதிக ஆயுதங்களையும், வளங்களையும் கவரக் கூடும். ஈராக் நிலைகுலைந்து போனால், அந்த தாக்கம் ஜோர்டான போன்ற நமது நேச நாடுகளுக்கு பரவக் கூடும்.

அமெரிக்கா இதற்குப்பதிலளிக்க வேணடியதாக இருக்கும். ஆனால், இதற்கு நாம் தனியாக மட்டுமே பதிலளிக்கப் போவதில்லை. இதைப்போன்ற இயக்கங்



கள் தலையெடுக்கும் இடங்களில் எல்லாம் பல்வேறு நாடுகளின் வீரர்களைக் கொண்ட அமெரிக்கப் படைகளை அனுப்புவது பற்றி நாம் சிந்திக்கப் போவதில்லை.

அதைவிட அதிக கூர்மையான, உரிய இலக்கு தொடர்பாக திட்டமிட்ட போர் தந்திரத்தை நாம் கையாள வேண்டியுள்ளது. உள்ளூரில் சட்டத்தை நிலைநாட்டுபவர்கள் மற்றும் இராணுவத்துக்கு கூட்டாளியாக இருந்து, இத்தகைய தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ள இடங்களில் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களின் பணி சிறப்பாக அமைய நாம் செயலாற்ற வேண்டியுள்ளது என்றார்.

## தி.மு.க. முக்கிய பிரமுகர்கள் 33பேர் பதவியிலிருந்து நீக்கம்



நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஏற்பட்ட தோல்விக்கு காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டில் அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், 3 மாவட்டச் செயலாளர்கள் உட்பட 33 முக்கிய பதவியில் உள்ளவர்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

தேர்தல் தோல்விக்கான காரணங்களை ஆராய்ந்த கட்சியின் குழுவின் பரிந்துரையின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவரான கருணாநிதி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஒரு வாரகாலத்துக்குள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு, உரிய பதில் தராவிட்டால், கட்சியில் இருந்து முழுமையாக நீக்கப்படுவார்கள் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஈராக்கின் மேற்குப் பகுதி தீவிரவாதிகள் வசம்



ஈராக்கின் மேற்கு எல்லைப் பகுதி போராளிகளின் கட்டுப்பாட்டுகளுக்குள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிரியா மற்றும் ஜோர்தான் எல்லைப் பகுதியே இவ்வாறு தம்மால் கைப்பற்றப்பட்டுள்ளதாக சுனி போராளிகள் அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அங்கு தொடர்ச்சியாக மோல்தல்கள் இடம் பெற்று வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்தியர்களின் கறுப்புப் பணம் பட்டியலை வெளியிடுகிறது சுவிஸ்


சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணத்தைப் பதுக்கிவைத்துள்ள இந்தியர்களின் பட்டியலை, மத்திய அரசிடம் வழங்க சுவிஸ் அரசு முன்வந்துள்ளது.

கறுப்புப் பணத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்துக்கு, மிகுந்த வலுசேர்க்கும் அம்சமாகவே இந்த விவகாரம் நோக்கப்படுகிறது.

சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணத்தை முதலீடு செய்துள்ள இந்தியர்களின் பட்டியலை, அந்நாட்டு அரசு தயார் செய்துள்ளது. இந்தப் பட்டியலில், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் விவரங்கள் இடம்பெற்றுள்ளதாக சுவிஸ் அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் மொத்தம் 283 வங்கிகள் செயல்படுகின்றன. இதில் யு.பி.எஸ்., கிரெடிட் சுசி ஆகியவை மிகப் பெரிய. வங்கிகளாகும். வரி ஏய்ப்பாளர்களின் சொர்க்கபுரியாக கருதப்படும் இந்த வங்கிகளில் வெளிநாட்டினர் கோடிக்கணக்கில் பணத்தைக் குவித்து வருகின்றனர்.


இந்தியாவில் புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசுடன் சுவிஸ் அரச தரப்பில் இருந்து தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும், இந்தியாவில் கறுப்புப் பணத்தை மீட்பதற்காக அமைககப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வு குழுவுக்கு தேவையான தகவல்களை வழங்க சுவிஸ் அரசு தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்திருப்போர் பட்டியலில் இங்கிலாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அமெரிக்கா, மேற்கிந்திய தீவுகள், ஜேர்மனி ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உலகச் செய்திகள்

## ஆஸியிலிருந்து நாடு திரும்புவோருக்கு 10ஆயிரம் டொலர் வழங்க தீர்மானம்



அவுஸ்ரேலியாவின் தென்கிழக்கு ஆசிய முகாம்களிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களில் தாமாக முன்வந்து நாடு திரும்புவோருக்கு 10,000 அவுஸ்ரேலிய டொலர்களை வழங்குவதற்கு அவுஸ்ரேலியா அரசு தீர்மானித்துள்ளது.

பப்புவா நியூகினி, மானுஸ் தீவு உள்ளிட்ட தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கே இவ்வாறு பணம் வழங்க அவுஸ்ரேலியா அரசு தீர்மானித்திருப்பதாக த சிட்னி மோர்னிங் ஹெரால்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் தாமாக முன்வந்து நாடு திரும்புவதற்கு ஏற்கனவே பணம வழங்கப்பட்டு வந்த நிலையில் இந்தத் தொகையை அதிகரிக்க அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பப்புவா நியூகினி தடுப்பு முகாமிலுள்ள லெபனானைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது புகலிட விண்ணப்பத்தை மீளப்பெற்று தமது நாட்டுக்குத் திரும்ப விரும்பினால் அவர்களுக்கு 10,000 அவுஸ்ரேலிய டொலர்கள் வழங்கப்படவிருப்பதாகவும், ஈரான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு 7000 அவுஸ்ரேலிய டொலர்களையும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கு 4000 அவுஸ்ரேலிய டொலர்களும், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு 3,300 அவுஸ்ரேலிய டொலர்களையும் வழங்குவதற்கு அவுஸ்ரேலியா அரசு முன்வந்திருப்பதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களைக் குறைக்கும் நோக்கிலேயே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல இதுவரை 283 பேர் தர்மாக முன்வந்து நாடு திரும்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதமரின் தாயைக் கடத்தப்போவதாக முகப்புத்தகத்தில் மோடிக்கு மிரட்டல்




உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த இன்சமாம் கத்ரி என்ற பெயரில் முகப்புத்தகத்தில் வெளியான தகவலில், மோடியின் தாயாரை நாங்கள் கடத்தினால், நாங்கள் கூறுமு அத்தனையையும் நரேந்திர மோடி செய்வார் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. முகப்புத்தகத்தில் வெளியான இந்தக் கருத்துக்கு பலரும் கண்டனம் தெரிவித்து கருத்து வெளியிட்டு வருகினறனர். இந்தத் தகவல் வெளியானவுடன் இது குறித்து குஜராத் மாநில காவல்துறைக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து காந்திநகரில் வசித்து வரும் பிரதமர் நரேந்திர மோடி யின் தாயார் ஹிராபாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மீள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

இருப்பினும், முகப்புத்தகக் கருத்துக் குறித்து பதிலளிக்க குஜராத் மாநில காவலர்கள் மறுத்து விட்டனர். மேலும், அந்த கருத்து முகப்புத்தகத்திலிருந்து உடனடியாக நீக்கப்பட்டது. இதையடுத்து, குஜராத் மாநில காவல்துறையினரும், உத்தர பிரதேச காவல்துறையினரும் இது தொடர்பான விசாரணையை தொடங்கியுள்ளனர். மாநில உளவு பிரிவு மற்றும் உள்துறை அதிகாரிகளும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

PUBLIC LI
JAFFNA

# மக்கள் பிரதிநிதிகளுக்கு செயற்திறன் மிக அவசியம்

## மாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு





(கரைச்சி)

செயற்திறன் மிக்கவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகின்ற சந்தர்ப்பத்திலேயே மக்களின் வாழ்வியலும், தேசமும் மேம்பாடடையும். மாறாக கோஷமிடுபவர்களின் பிரதிநிதித்துவம் மக்களுக்கு எந்தப் பயனையும் வழங்கப்போவதில்லை. அதற்கு வடக்கு மாகாண சபை சிறந்த எடுத்துக்காட்டு என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று உருத்திரபுரம் சிவநகருக்கான மின்சார விநியோக ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அபிவிருத்தி வேலைகளை செய்யக் கூடியவர்கள் யார் என்பதனை மக்கள் அடையாளம் கண்டு அதற்கேற்றால்போல் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

தேசியத்தைப் பற்றி கோஷமிடுவதற்கு பலர் உள்ளனர். ஆனால் அவர்களது வேலையை அவர்கள் இல்லாதுவிட்டாலும் வேறு எவராயினும் செய்துவிடலாம்.

குறிப்பாக ஒலிப்பதிவுக் கருவிகளுக்கூடாகவும் அவர்களின் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும். ஏனெனில், அவர்கள் ஒரே விடயத்தையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், செயலில் செய்யக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களை, மக்கள் பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஆனால், எமது மக்கள் தெரிவு செய்யும் தலைவர்கள் அநேகமாக வாய்ப்பேச்சுக்களால் காலத்தை கழிப்பவர்களாகவே இருக்கிறார்கள். புத்திசாலித்தனமாக சிந்தித்து மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற தேவை அல்லது அந்தத் திறமை அவர்களிடம் காணப்படுவதில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சி 1977 ஆம் ஆண்டில் இருந்து எதிர்க்கட்சியாக இருந்து குறைகளை மட்டுமே கூறிக்கொண்டே இன்றுவரையும் காலத்தைக் கழித்துவிட்டார்கள்.

ஆனால், இப்பொழுது முதன முதலாக வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியாக பொறுப்பேற்றிருக்கும் இந்தக் கட்சியினர் இலங்கையில் இருக்கும் மக்களுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் தமது வேலைகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு வடமாகாண ஆளுநரும், அரசாங்கமும் தடையாக இருப்பதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றார்கள்.

ஆனால், விடயம் அவ்வாறு இல்லை. மத்திய அரசாங்கத்திற்கான அதிகாரம், மாகாண அரசாங்கத்திற்கான அதிகாரம், இரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள் என மூன்று வகையான அதிகாரங்கள் வடக்கு மாகாண சபையிடம் இருக்கின்றன.

இவற்றில் மாகாண சபைக்கு மட்டும் 37 விடயங்களிலும், மாகாண சபையும், மத்திய அரசாங்கமும் இணைந்து கலந்தாலோசித்து தீர்மானங்களை எடுக்க வேண்டியவை 35 விடயங்களும் உள்ளன.

மத்திய அரசாங்கத்திற்கு மட்டும் உரித்தாக 20 விடயங்களுக்கான அதிகாரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இதில், பாதுகாப்பு, சுங்கம் உட்பட்ட இருபது விடயங்களே உள்ளடங்குகின்றன.

ஆனால், மாகாண சபையிடம் இருக்கும் 37 அதிகாரங்களில் பொலிஸ் மற்றும் காணி ஆகிய இரண்டு அதிகாரங்கள் மட்டுமே சர்ச்சையில் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு கிடைக்கப் பெறாமல் இருக்கின்றன.

இவற்றைத் தவிர்ந்த ஏனைய 35 விடயங்களுள் குறிப்பாக கல்வி, சுகாதாரம், மற்றும் உள்ளூராட்சி என முக்கியமான துறைகள் உள்ளிட்ட 35 துறைகளை நிர்வகிக்கக்கூடிய சட்டவலு மாகாண சபைகளுக்கு இருக்கின்றது. ஆனால், மாகாண சபைகள் அதனைப் பற்றி வெளியில் சொல்வதுமில்லை. செய்வதுமில்லை.

இல்லாத இரண்டு விடயங்களையும் சொல்லிக்கொண்டே எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. காணி அதிகாரமும், பொலிஸ் அதிகாரமும் இல்லாத காரணத்தினால் ஏனைய விடயங்களையும் செய்ய முடியாமல் இருப்பதாக இவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

ஆனால், இலங்கையில் ஏனைய மாகாண சபைகளுக்கும் உள்ள அதிகாரங்களில் மத்திய அரசாங்கம் தலையிட முடியாது. உதாரணமாக வடக்கு மாகாண சபை தெரிவு செய்வதற்கு முன்னர் இங்கிருந்த ஆசிரியர் பற்றாக்குறைகள் அல்லது வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட விடயங்கள் ஒரு பிரச்சினையாக வரும்போது நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் கவனத்திற்கு கொண்டு வரும் பொழுது அவர் அந்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாகவோ அல்லது ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாகவோ ஆளுநருடன் கதைத்து செய்யக்கூடியதாக இருந்தது.

தற்போது வடக்கு மாகாண சபை தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் ஆசிரியரையோ வைத்தியரையோ நியமிப்பதற்கான அதிகாரம் இப்பொழுது அவரிடம் இல்லாமல் போய்விட்டது. அதன் அர்த்தம் என்னவென்றால், வடக்கு மாகாண சபைக்கு அந்த அதிகாரம் சென்றுவிட்டது. ஆனால், அந்த அதிகாரத்தை பாவிக்க முடியாத செயலற்றவர்களாகவே வடக்கு மாகாண சபையினர் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கவிதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான கிருஸ்ணசாமி, மனோகரன், இராமச்சந்திரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அன்ரன் அன்பழகன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மின்சார சபையின் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் குகராஜ், வடக்கின் வசந்தம் மின் திட்ட பொறியியலாளர்கள், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## அளுத்கமவில்....

நடவடிக்கை எடுக்க வேண்டும் என முஸ்லிம் நாடுகள் எச்சரித்திருந்தன. இந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர், மேற்படி சம்ப வங்கள் தொடர்பான அறிக்கையை முஸ்லிம் நாடுகளின் இராஜ தந்திரிகளிடம் வழங்கியுள்ளார்.

வளைகுடா நாடு முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களுக்கு மட்டுமல்லாது, இந்தோனேஷியா, பாகிஸ்தான், துருக்கி உள்ளிட்ட நாடு களின் இராஜதந்திரிகளுக்கும் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து விளக்கியதாக அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர் சம்பவங்கள் தொடர்பில் தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என பங்களாதேஷ், இந்தோனேஷியா, மலேஷியா, குவைத், மாலைதீவு, பாகிஸ்தான், ஈரான், ஈராக், பாலஸ்தீனம், சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், துருக்கி ஆகிய நாடுகளின் கொழும்பில் உள்ள தூதரகங்கள், அரசாங்கத்திற்கு வலுவாக வலியுறுத்தியிருந்தன.

# கோண்டாவில் கொலை வழக்கு; மேலும் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட இளைஞனின் இரு சகோதரர்கள் நேற்று கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு காரணமான உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் கோண்டாவில் பகுதியில் வீட்டில் நுழைந்து மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் ரவீந்திரன் சுகிர்தன் (வயது - 19) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் கோண்டாவில் மற்றும் உரும்பிராய்ப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டதுடன், பரிசோதனை நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

அதேவேளை வாள்வெட்டில் பலியான இளைஞனின் சகோதரனான ரவீந்திரன் செந்தூரனின் காதல் விவகாரத்தினால் ஏற்பட்ட மோதல் பிரச்சினையின் காரணமாக இரு இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் தொடர் விசாரணைக்காகவே இக் கைது இடம்பெற்றுள்ளது. (25)

# ஐ.நா. விசாரணைக் குழுவில் பின்லாந்து முன்னாள் ஜனாதிபதியும்



ஐ.நா. விசாரணைக்குழுவின் நிபுணர்களில் ஒருவராக முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்டி அத்திசாரி நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றபபட்ட தீர்மானத்திற்கு அமைய, இலங்கை தொடர்பிலான விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் விசேட நிபுணர்கள் இருவர் நியமிக்கப்படவுள்ளனர். ஆலோசனை வழங்கும் நிபுணர்களில் ஒருவராக நோபல் சமாதான விருது வென்ற முன்னாள் பின்லாந்தின் ஜனாதிபதி மார்டி அத்திசாரி நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்திசாரி கொசோவோவிற்கான ஐக்கிய நாடுகள் பிரதிநிதியாக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நியூஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் நாயகம் டேம் சில்வியா கட்ரைட் மற்றைய நிபுணராக கடமையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை தொடர்பான விசாரணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய விபரங்கள் தொடர்பில் இந்த வாரத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காணாமற்...

யூலை மாதம் 5ஆம் திகதி மற்றும் 6ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இவ்விடயம் குறித்து நேற்று முற்பகல் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

## எலிசபேத்...

ஆம் திகதி 2 ஆவது எலிசபேத் மகாராணி பிறந்த தின வைபவம் நடைபெற்றது. இதில் அரச பிரதிநிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், வாழ்த்துரையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மாகாண மட்ட...

பட்டிருந்த நிலையில் இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அந்த நேரத்திற்கு வருகை தந்திருக்கவில்லை.

இதனையடுத்து நிகழ்வு 10.05 மணிக்கு ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டு வடமாகாண கல்வியமைச்சர், வடமாகாண சபை உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் காத்திருந்தவேளை, தெரிவிக்கப்பட்ட நேரத்திற்கு வருகைதராத முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் 11.00 மணிக்கே வருகைதந்ததனையடுத்து நிகழ்வு ஆரம்பமாகியது.

மாணவர்களது பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் முதலமைச்சர் உட்பட்ட அதிதிகள் யாவரும் வரவேற்கப்பட்டு அரங்கிற்கு அழைத்துவரப்பட்டனர். தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களது அணிவகுப்பு மரியாதையை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா, கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் ஆகியோர் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து மாணவர்களின் ஒலிம்பிக்தீபமேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து மாணவர்கள் மற்றும் நடுவர்களின் உறுதியுரை இடம்பெற்றதனையடுத்து விளையாட்டு நிகழ்வை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து ஆரம்பத்தில் சுவட்டு மைதான நிகழ்வுகள் நடைபெற்றன.

இதனால் போட்டிக்கு தயாராக வருகைதந்த மாணவர்கள் மிகவும் உற்சாகமிழந்து காணப்பட்டனர். உச்சி வெய்யிலில் காத்திருந்து களைப்படைந்தவர்களாகவும் இருந்தனர்.

அங்கு வருகைதந்த ஏனைய அதிகாரிகள் பொறுமையிழந்து தமக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். (பா)

PUBLIC LIB
JAFFNA

# யாழில் கைத்தொழில்துறை அபிவிருத்தி கொழும்பில் உயர்மட்டக் கலந்துரையாடல்



(கொழும்பு)

நவீன தொழில்நுட்பம் மட்டுமல்லாது சிறந்த வழிகாட்டல்களுக்கும் ஆலோசனைகளுக்கும் அமைவாகவே சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளை மென்மேலும் வளர்த்தெடுக்க முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் யாழ்.மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிற்துறையை மேம்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு பிரதேசத்தினதோ அல்லது மாவட்டத்தினதோ அபிவிருத்தி என்பது அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைகளையும் பொறுத்து அமைந்துள்ளது.

அந்தவகையில், யாழ்.மாவட்டத்தில் பல்வேறுபட்ட சிறுதொழில் முயற்சியாண்மை கிராமங்கள் நிறுவப்பட்டு அவை சிறப்புடன் இயங்கி வருகின்றன. இருந்த போதிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதாக உற்பத்திகள் முன்னெடுக்கப்படும் போதுதான் அவற்றுக்கான சந்தைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அதுமட்டுமன்றி இவ்வாறான உற்பத்திகளுக்கு தொழில்நுட்பம் மட்டுமல்லாது துறைசார்ந்தோரது வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் பெறப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்துறைசார்ந்த உற்பத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தையும் அந்தந்தப் பகுதிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் துறைசார்ந்தவர்கள் ஒன்றிணைந்த பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது சங்கானை மட்பாண்டக்கிராமம், அந்திரான் தோற்பொருள் உற்பத்திக் கிராமம், சங்கானை பற்றிக் கிராமம், நீர்வேலி வாழைநார் உற்பத்திக் கிராமம், நீர்வேலி மின்பொறியியல் உற்பத்திக் கிராமம், அல்லாரை தும்பு உற்பத்திக் கிராமம், வதிரி தோற் பொருள் உற்பத்திக் கிராமம் என யாழ். மாவட்டத்தில் பல்வேறு சிறுதொழில் முயற்சியாண்ம உற்பத்திக் கிராமங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் இக்கிராமங்கள் ஊடான உற்பத்திகளை மென்மேலும் வளர்த்தெடுத்து மேம்படுத்துவதற்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உடனிருந்தார்.

# உலகக்கிண்ண கால்பந்து



பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டியில் நேற்று நடந்த முதலாவது போட்டியில் 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தியது ஸ்பெயின். மற்றொரு போட்டியில் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் சிலியை வீழ்த்தியது நெதர்லாந்து.

# பேருந்து மீது தாக்குதல்

(பளை)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து மீது பளைப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் பேருந்தின் பின் பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்ததாகவும் சம்பவம் தொடர்பாக பேருந்து உரிமையாளர் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்த பின்னர் பயணத்தைத் தொடர்ந்ததாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் அநுராதபுரம், மதவாச்சி உள்ளிட்ட இடங்களில் யாழ்ப்பாணம் - கொழும்பு பேருந்துகள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சுத் தாக்குதல் தற்போது யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார விதிகளை மீறாமல் வேள்வி; மல்லாகம் நீதிமன்று அனுமதி

மல்லாகம் நீதவானின் உத்தரவின்படி வலி. தென்மேற்கு பிரதேசசபை தவிசாளரின் அனுமதியுடன் சுகாதாரப் பரிசோதகர்களின் நடைமுறைகளுக்கமைய நவாலி, தில்லைக் காளியம்மன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை வேள்வி நடைபெற்றது.

பொதுமக்கள் எவரும் பார்க்காதவாறு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கொல்களத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட கடாக்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன.

நவாலி தில்லைக் காளியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மிருக பலியைத் தடுத்து நிறுத்துமாறு இந்து மகா சபையினர் மானிப்பாய் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் இவ்விடயம் பற்றி மல்லாகம் நீதவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். இது பற்றி விசாரணை செய்த நீதவான் பிரதேசசபை தவிசாளரின் அனுமதியுடன் சுகாதார விதிமுறைகளுக்கமைய மிருக பலியை நடத்துமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து வலி. தென்மேற்கு பிரதேச சபையின் அனுமதியுடன் சுகாதார விதிமுறைகளுக்கமைய பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட கொல்களத்தில் வைத்துக் கடாக்கள் வெட்டப்பட்டன. (48)

# மீண்டும் யுத்தகால சூழலா? அனுமதிக்க முடியாது



கடந்த வாரம் நடந்த வன்முறைகள், முஸ்லிம் எதிர்ப்பு மோதல்கள் காரணமாக இழக்கப்பட்ட உயிர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கவலை வெளியிட்டுள்ளார்.

புத்த மத்தின் பெயரால், தமது தனிப்பட்ட குறுகிய நோக்கங்ளுக்காக செயற்படும் குழப்பங்களை ஏற்பத்தும் அடிப்படைவாதிகள் சிலர் நடத்திய மக்களை தூண்டும் ஊர்வலம் மற்றும் கூட்டம் என்பன இந்த மோதல்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக தனக்குத் தெரிய வந்துள்ளதாகக் கூறும் சந்திரிகா, நடைபெற்ற மோதல்கள் குறித்து தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


சுமார் 18 மாதங்களாக பகையுணர்வை தூண்டி அசிங்கமான விதத்தில் வன்முறைகளால் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்த சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகள் தவறியமை குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

எப்போதும் இல்லாத வகையில், இலங்கையில் வாழும் சகல இனங்களுக்கும் ஜனநாயகத்தின் மூலம் சரிசமமான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளை வழங்குவதற்கு மாபெரும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இந்த நிலையில், இன மற்றும் மத பேதங்களை ஏற்படுத்தும் மோதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு தலைவர்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் என அனைவரும் இன்றைய அரசாங்கத்தின் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்க வேண்டும்.

மோதலில் ஈடுபட மக்களைத் தூண்டியவர்கள், அந்த குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர்கள் தாமதமின்றி சட்டத்திற்கு முன்கொண்டு வரப்பட்டு அவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படல் வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லை படை தலைமையகத்தில் தமிழ் யுவதிகள் சாகசம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் தற்போது பயிற்சி பெற்றுவரும் தமிழ் யுவதிகள் தமது பெற்றோர் மற்றும் பாதுகாவலர் ஆகியோரைச் சந்தித்து உறவாடும் ஒன்றுகூடல் நிகழ்வு படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பயிற்சி பெறும் யுவதிகளின் பெற்றோருக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஒன்று கூடல் நிக்ழ்வினை கொமாண்டர் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஏற்பாடு செய்திருந்தார்.

நடனம், கராத்தே மற்றும் இன்னிசை போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு ஆடம்பரமான மதிய உணவும் இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டோருக்கு வழங்கப்பட்டது.

# சட்டவிரோத ஆயுதங்கள்ள ஒப்படைக்க அறிவுறுத்தல்

## வலி. கிழக்கில் துண்டுப்பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தும் ஆயுதங்களை சட்டவிரோதமாக வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாணத்தில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அச்சுவேலி, வலி.கிழக்கு மற்றும் வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் இந்தத் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

ஆயுதங்களை தம்வசம் வைத்திருப்பவர்கள் அதனை உடனடியாக அருகிலுள்ள இராணுவ முகாமிலோ அல்லது பொலிஸ் நிலையத்திலோ ஒப்படைக்கமுடியும். அவ்வாறில்லாமல் தம்வசம் வைத்திருந்து பிடிக்கப்பட்டால் அவர்கள் பிணையில் வெளியில் வர முடியாது தடுப்பில் வைக்கப்படுவார்கள் என அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு ஆயுதங்களை எங்காவது கண்டெடுத்தால் அல்லது வைத்திருப்பவர்களை அடையாளங்கண்டால் அல்லது எங்காவது ஆயுதங்கள் இருப்பது கண்ணுற்றால் அது தொடர்பில் இராணுவத்தினருக்கு தகவல் தெரிவிக்க முடியுமென்றும், தகவல் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமென்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (25)

## அராலியில் விபத்து வயோதிய மாது பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிப மாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அராலி வடக்குப் பகுதியைச் சேர்ந்த கிருஸ்ணன் தங்கம்மா (வயது - 80) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அராலி வடக்கு வீதியை கடக்க முற்பட்ட வேளையிலேயே மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூன் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.